திருவள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி – ஐப்பசி

# பொய்யாமொழி

கல்வி, கலை, இலக்கிய சமூக இதழ் செப்ரெம்பர்–ஒக்ரோபர்

## உள்ளே...


- மக்கள் குரல் -அபிவிருத்தி என்ற பெயரில்..........
- ஆசிரியர் தலையங்கம்- நம்பிக்கை பொய்க்காது
- பசியோடு இரு-கட்டுரை
- கத்தரிக்காயின் மருத்துவ பயன்கள்
- மாதகல் மயில்வாகனப் புலவர்- கட்டுரை
- பாலஸ்தீனக் கவிதைகள் -மொழிபெயர்ப்புக்கவிதை
- தாயவள் கனவு- சிறுகதை
- நவக்கிரகங்களை அட்டம கிரகங்களாக்கியது தவறு-விஞ்ஞானக் கட்டுரை
- கிழட்டுப்பூனை- சிறுவருக்கான கதை
- மூன்று பன்றிக்குட்டிகள் (ஆங்கிலமொழிக் கதை -சிறுவருக்கானது)
- சொற்தேடல் (ஆங்கிலம்)
- விடுகதைகள், புதிர்
- தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-1
- அரசியல் கைதிகள்...
- சிறுவர் ஆக்கம் - சித்திரம்


தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி-1 உள்ளே




# அபிவிருத்தி என்ற பெயரில்....

## "மகாவலி அபிவிருத்தித் திட்டம்,வடக்குக் கிழக்கிற்கு வேண்டாம்" – எதற்காக?

-மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டம்

"கங்காநதி" என்ற தமிழ்ப்பெயர் கொண்ட மகாவலி நதி இலங்கையின் மிகநீண்ட நதி. நாட்டின் நிலப் பரப்பில் ஐந்தில் ஒரு பங்கு நிலத்தை வடிகாலாகக் கொண்டது. இலங்கைக்கான மின் உற்பதியின் 90 சதவீதம் இதன் பங்களிப்பாகும். மிகப் பெரும்பான்மையான வயல் நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதும் இந்த நதிதான். இவ்வாறு கங்காநதியின் பயன்பாடு சொல்லில் அடங்காது. இருப்பினும் தமிழ் மக்கள் ஏன் இந்த அபிவிருத்தித் திட்டத்தை எதிர்க்கிறார்கள். தமிழ் மக்களின்கடந்தகால வாழ்க்கை வரலாற்று அனுபவங்கள் தான், இதற்கான காரணங்களாக அமைகின்றன. நதியை மூலமாகக் கொண்ட பெரும் அபிவிருத்தித்திட்டங்கள்எதுவும் தமிழ் மக்களுக்கு நன்மையளிக்கவில்லை. மாறாக பெருந் தீங்கிழைத்துள்ளன. இவற்றுள் இலங்கை அரசின் கல்லோயா அபிவிருத்தித் திட்டமும் மகாவலி அபிவிருத்தித் திட்டமும் தமிழ் மக்களுக்கு சொல்லொணாத்துரோகத்தை இழைத்துள்ளன.


இது மக்கள் குரல்

-தொடர்ச்சி பக்கம் 2 இல்

# மன்னார் வளைகுடாவின் M2 வலயத்தில் பெற்றோலியம் எடுப்பதற்கான ஏற்பாடுகள்

மன்னார்வளைகுடாவை பல வலையங்களாகப் பிரித்து பெற்றோலிய ஆய்வுகளை மேற்கொண்ட இந்திய நிறுவனமானகெய்ர்ன் நிறுவனம் 2012 இல் பெற்றோலிய இருப்பு சம்பந்தமான அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தது. இதைத்தொடர்ந்து முன்னைநாள் அரசாங்கத்தில் மந்திரியாக இருந்த பசில் ராஜபக்ச 2015 இல் -மன்னாரில் எந்த ஆர்ப் பாட்டமுமின்றி பெற்றோலியக்கிணறு ஆகழ்வுகள் நிகழ்ந்து கொண்டிருப்பதாகவும் கூட்டமொன்றில் தெரிவித்திருந்தார். தற்போது உள்ள

-தொடர்ச்சி பக்கம் 33 இல்




இலங்கையின் பேரினவாத அரசியல் தலைவர்கள்சிங்கள மக்களிடமிருந்து தமது வாக்கு வங்கிகளை நிரப்பிக் கொண்டு அதிகார சுகபோகத்தை அனுப விப்பதற்காக. தாம் நீண்ட காலத்துக்கு பயன் பெறும் திட்டங்களைத் தீட்டினர். இதற் காகஐ.நாசபையின்நிதியையும் பெற்றுக் கொண்டனர்.


இந்தவகையில்முதலாவது முதன்மந்திரி சேனநாயக்க வினால் முதன்முதலாக1950இல் ஆரம்பிக்கப்பட்ட திட்டம்தான் கல்லோயா அபிவிருத்தித் திட்டம். இது முன்பு 'பட்டிப்பளை ஆறு' என்றுதான் தமிழர் களால் அழைக்கப்பட்டு வந்தது. பட்டிப்பளை தமிழர் பிரதேசமாகும். இத்திட்டத் தின் மூலம் வெவ்வேறு மாவட் டங்களில் இருந்து (அதிகள வில் சிங்களமக்கள் வாழ்ந்த இடங்கள்) சிங்கள மக்கள். தமிழரின் பாரம்பரிய மாவட் டமாக இருந்த மட்டக்களப் பிற்கு கொண்டுவந்து குடியேற் றப்பட்டனர். இதனால் காலப் போக்கில் மட்டக்களப்பில் தமிழர்கள் சிறுபான்மை யினராக ஆக்கப்பட்டனர். அதுமட்டமல்ல தமிழரின் தொடர்ச்சியான தாயகப் பெரு நிலம்துண்டாடப்பட்டுவிட்டது.

1961 இல் முன்பிருந்த மட்டக்களப்பு மாவட்டத்தின் பரப்பளவு, அதன்பின்பு பாதி யாகக் குறைக்கப்பட்டது. ஏனெனில் அதன் தென்பகுதி சிங்களப் பிரதேசங்களுடன் இணைக்கப்பட்டு அம்பாறை என்றபுதியமாவட்டம்உருவாக் கப்பட்டுவிட்டது. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் குறைக்கப் பட்டும்விட்டது. அது மட்டுமல்ல இவ் அபிவிருத்தித் திட்டத் தின் மூலம் காலப்போக்கில் தமிழரின் தனித் தேசியத் தாயகக் கோட்பாட்டை சிதைத்து விடவும் அவர்கள் கங்கணம் கட்டினர். இன்று அவர்கள் தமது நோக்கத்தில் வெற்றி பெறும் தறுவாய்க்கு வந்து விட்டனர். ஏனெனில் உலகம் வியந்த, தமிழரின் தேசியப் போராட்டம் மிகவும் ஒடுக்கப் பட்டு மிகமிக நுண்ணிய தாக்கப்பட்டுவிட்டது. அதுமட்டு மல்ல இன்று பதவியிலுள்ள தமிழ் அரசியல் தலைவர்கள் தமது பதவி, பந்தோபஸ்தின் மீதுமட்டும்தான் குறியாக உள்ளர். அவர்களின் அரசியல். மேடையின்றிய நாடகமாகவே திகழ்ந்துவருகிறது.

கல்லோயாத் திட்டத் தினால் மட்டுமல்ல, பின்பு மகாவலி அபிருத்தித் திட்டத் தினாலும் மட்டக்களப்புக்கு சிங்களவர்கள் கொண்டு வந்து குடியேற்றப்பட்டதுடன் மட்டக்களப்பின் பிரதேசங்கள் வெவ்வேறு மாவட்டங்களு டன் இணைக்கப்பட்டுவிட்ட தால், இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்கள் குடித்தொகையில் 2ஆம் இடத்தில் உள்ளனர். கிழக்கில் மட்டுமல்ல தமிழருக்கு இந்த அனுபவம். வடக்கிலும் தமிழ் மக்கள் துரத்தியடிக்கப்பட்டுள் ளனர்.

வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு பிரதேசமானது,தமிழர்களின் பாரம்பரிய பூமி. ஆனால், அங்கே சிங்களக் குடியேற் றங்கள் முளைக்கத் தொடங் கியதிலிருந்து இனமுறுகல் ஆரம்பமாகியது. இன முறுகல் உச்சமாகியபோது அங்கிருந்து படையினரின் உதவியுடன் தமிழர்கள் விரட்டப்பட்டனர். உலர்வலய விவசாயக் குடி யேற்றம் என்ற பெயரில் 1984 இல் அங்கு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். பின்னர், வடக்கிற்கு திருப்பப்பட்ட மகாவலி "L" வலயத்திட்டத் தினால் 1988 இல் இது வெலி யோயா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு மகாவலி அபி விருத்தி சபையால் கையகப் படுத்தப்பட்டு அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப் பட்டு வர்த்தமானி அறிவித்தல் விடப்பட்டது.

இதன் பின்பு மேலும் சிங்களக் குடியேற்றங்களால் அது நிரப்பப்பட்டது. ஆயினும் தமிழ்த் தரப்புகளின் அழுத் தத்திற்குப் பணிந்தல்ல முல்லை யில் சிங்களவரது பிரதிநதித்து வத்தைக் கொண்டுவரும் நோக்கில், இப்பகுதி மீண்டும் முல்லைத்தீவு மாவட்டத்து டன்இணைக்கப்பட்டது. ஆனால் அது முல்லைத்தீவு மாவட்டத் தில் சிங்களமக்களின் பாராளு மன்றப் பிரதிநிதித்துவத்துக்கு இடமளித்தது. அதுமட்டுமல்ல அங்கிருந்து 1984 இல் விரட் டப்பட்ட தமிழ்மக்கள் தற் போதும் தங்கள் பூர்வீக நிலத் தையும் முல்லைக் கடலை யும் கூட, மீளப்பெற முடியா மல் குமுறும் நிலையை உருவாக்கியுள்ளது. திருமலை மாவட்டம் இதற்கு விதிவிலக் கல்ல. அங்கும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நிகழ்ந்த சம்பவங்களே ம.அ.அ.சபை யால் ஏற்படுத்தப்பட்டு குடித் தொகையில் தமிழர்கள் 3 ஆம்இடத்தில்உள்ளனர். இதன் பால் தமிழர் தாயகத்தில் பூர்வீகமாக இருந்த தொடர்ச்சி யான குடிப்பரம்பல் சிதைக்கப் பட்டுவிட்டது. இந்த நிலையில் தான் ம.அ.அ.ச தமது திட்டத்தை கிளிநொச்சி நோக்கி கொண்டு வருகிறார்கள். வடக்கும்சிங்கள மயமாக்கப்படுவதற்கான இந்தத் திட்டத்தை எப்படி தமிழர்கள் வரவேற்பார்கள்? எல்லாவற்றை யும் இழந்து இறுதியில் இன வாதிகளால் கொன்றொழிக் கப்படுவதற்கா? கீழே படத்தில் 1981- இனப்பரம்பல் மாற்றம் தரப்பட்டுள்ளது. 2018இல் எப்படி அது இருக்கும் என்தை ஊகித்துக் கொள்வதற்கே.



# நம்பிக்கை பொய்க்காது



பொபிசான்ட்



காந்தி

"சொல்லுக சொல்லைப் பிறிதொர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து."


**எ**ன்பது வள்ளுவர் வாக்கு.அதன்படி நோக்கின் அறம் என்ற சொல் வள்ளுவனின் குறளுக்கு பொருத்தமானதாக இருப்பதாக சிந்தனையில் உதித்தது. எண்ணக்கரு, சிந்தனைக்கதிரின் சிறகடிப்பு,அறநெறிப் போராட்டங்களை நோக்கிப் பறந்தது. அவற்றுள் உண்ணாநிலைப் போராட்டம் நிமிர்ந்து நின்றது. அதிலும் சாகும்வரையிலான உண்ணா நிலைப்போராட்டம் குறிப்பாகத் தெரிந்தது. அதுவே இவ்விதழின் ஆசிரியத் தலையங்கமாக அமைகிறது. அறம் என்றால் என்ன? அறம் என்பது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் சேர்ந்த ஒன்று என்று கொள்ளலாம். எண்ணம் தூய்மையாக இருந்தால்தான் சொல்லும் செயலும் தூய்மையாக அமைய முடியும். எண்ணம் எழுவதற்கு இருப்பிடமாக உள்ள மனம் குற்றம் இல்லாததாக இருக்க வேண்டும். இந்த அறம் சார்ந்த வழியில் நடத்தப் படுவதே அறப்போராட்டம்.

ஒரு இனத்தின், குழுகாயத்தின் நலம் நோக்கியதாகவே இந்த அறப்போராட்டங்கள் அமையும். அந்தவகையில் அமைந்ததுதான் வடக்கிருத்தல் என்ற எமது முன்னோரின் நம்பிக்கை சார்ந்த வழக்கமாகும். வடதிசை நோக்கி உட்கார்ந்து உண்ணாநோன்பிருந்து உயிர் துறப்பதே வடக்கிருத்தல் எனப் பழந்தமிழர் கொண்டிருந்தனர். அன்றைய காலப் போர்களின்போது முதுகிலே புண்பட்ட வர்கள், அதை அவமானமாகக் கருதி போர்க்களத்திலேயே வடக்கு நோக்கியபடி பட்டினி கிடந்து தமது உயிரைப் போக்கிக் கொண்டவர் வரலாறும் உண்டு. வடக்கிருந்து உயிர் துறந்தோருக்கு நடுகல் இட்டு நினைவுச் சின்னமாக வழிபடுவதும் உண்டு. வடக்கிருத்தல் இக்காலத்தில் வழக்கில் இல்லை. வடக்கிருத்தலின் அடிப்படைக் காரணி யாக அமைவன மானம், வீரம், நட்பு, தனது நல்ல நோக்கம் நிறைவேறாமை என்பனவாக அமையலாம். இதன் அடிநாதமாக உள்ளது மக்களின் நலம் ஒன்றேயாகும்.

சங்க காலத் தமிழ் இலக்கியமான புறநானூற்றில் வரும் பாடல்கள் இரண்டில், சேர மன்னனான பெருஞ்சேரலாதன், கரிகால் சோழனுடன் ஏற்பட்ட போரின்போது முதுகில் புண் பட்டதனால் வடக்கிருந்து உயிர் துறந்தது கூறப்படுகின்றது. இங்கே தனது மக்களுக்கு தன்னால் களங்கம் ஏற்பட்டதே என மன்னன் நினைத்தான் என சொல்லாமல் ஒரு செய்தி சொல்லப்படுகின்றது.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்துறந்ததனை சான்றுகளோடு விளக்குகின்றது புறநானூறு. சோழ நாட்டைக் கோப்பெருஞ்சோழன் புலவர்களை மதித்து அவர்களுக்கு செல்வங்களை அள்ளிக் கொடுத்ததனை பொறுக்காத பொருளாசை கொண்ட அவனின் பிள்ளைகள் தந்தையை எதிர்த்து போர் தொடுக்க தயாரானார்கள். பிள்ளைகளுடன் போரிடுதல் அவமானம், என முடிவெடுத்த மன்னன் வடக்கிருந்து உயிர் துறக்க தயாரானான்.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கும் செய்தியை அறிந்தார் பாண்டியநாட்டு புலவரும் கோப்பெருஞ்சோழனின் உயிர் நண்பனுமான பிசிராந்தையார். அவர் வருவதற் கிடையில் சோழமன்னன் உயிர் பிரிந்தது. தனக்காக மன்னன் ஒதுக்கிய இடத்தில் வடக்கிருந்து பிசிராந்தையாரும் உயிர் நீத்தார்.அவர்கள் இருவரும் வேறு வேறு இடத்தில்



பொட்டி சிறீராமுலு



சங்கரலிங்கனார்

வாழ்ந்தாலும், ஒருவரை ஒருவர் காணாமலே நட்புக் கொண்டனர். வடக்கிருந்து இருவரும் ஒருவருக்காக ஒருவர் என உயிர்துறந்ததனால், மானுடநேயத்தின் மாண்பில் ஒன்றான நட்பு மேலும் பெருமை பெற்றது.

இந்த வழியில் அறப்போராட்டங்களின் மிகவும் முக்கியமான உண்ணநிலைப்போராட்டங்கள் பற்றி பார்ப்போம். மகாத்மா காந்தி கையாண்ட அறவழிப் போராட்டம், முதலில் தென்னாபிரிக்காவில் வாழ்ந்த இந்தியர் உட்பட்ட கறுப்பினத்தவர், வெள்ளையர் அரசின் கடுஞ் சட்டங்களால் அடைக்கியொடுக்கப்பட்டமைக்கு எதிராக அவரால் முன்னெடுக்கப்பட்டு வந்தது. பின்பு அவர், இந்தியா வந்தடைந்ததும், இந்திய விடுதலைக்காக பலகோணங்களில் அறப்போராட்டத்தை முன்னெடுத்தார். அவரது இந்த அறவழிப்போராட்ட வடிவம் இந்திய சுதேசிகளை அடித்து, உதைத்து, சிறையில் அடைத்து, சுடுகலன்களால் அடக்கி ஒடுக்கிய ஆங்கிலேய ஆட்சியாளர்களை அச்சுறுத்தியது.

தனது உடலை வருத்தி மகாத்மாகாந்தி கடைபிடித்த உண்ணாவிரதம் என்னும் அறப்போர், இந்திய விடுதலைக் காகவும், தீண்டாமைக்கு எதிராகவும், மத நல்லிணக்கத்துக் காகவும் மேற்கொள்ளப்பட்டவையாகும். மகாத்மா காந்தி, 17 முறை, உண்ணாநிலைப் போராட்டங்களை மேற் கொண்டார். அவற்றில் மூன்று முறை 21 நாட்கள் மேற்கொண்ட தொடர் உண்ணாநிலைப் போராட்டங்களை நடத்தினார். அவரின் அந்த அறப்போராட்டம் பிரித்தானிய ரான இந்திய அடக்குமுறையாளர்களை வியக்க வைத்தது. உண்ணாநிலைப் போராட்டத்தை, அறவழியிலான படைக்கருவியாக கொண்டார் காந்தி. அவரது அறக் கொள்கையை அழிக்கமுடியாத உள்நாட்டுச் சக்திகளின், அறியாமையால்- தன்கொள்கைக்காகவே உயிர் ஈகம் செய்தார் காந்தி.

போராட்ட வழிமுறையில் மிக உன்னத இடத்தில் இருக்கும் இத்தகைய அறப்போர் பற்றிய உலகவரலாற்றுப் பதிவேட்டினை சிறிது நோக்குவோம். வரலாற்று பதி வேட்டைப் புரட்டும்போது, 1956 ஒக்டோபர் 13ஆம்நாள், தமிழ்நாடு விருதுநகைரைச் சேர்ந்த பெரியகருப்புசாமி- சங்கரலிங்கனார் உண்ணாநோன்பிருந்து உயிரீகம் செய்த நாள் என பதியப்பட்டிருந்தது.

சங்கரலிங்கனார் மதராசு மாநிலம் (மெட்ராஸ் ஸ்டேட்) என்று அழைக்கப்பட்ட தமிழர் மாநிலத்தில் மத்தியரசின் பல அடக்குமுறைகளுக்கு எதிராக- அரசின் முன்பாக 1956 யூலையில் 12 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தார் தனியாக மொழிவழி மாகாணம் வேண்டும். சென்னை மாகாணத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்ட வேண்டும். அரசியல் தலைவர்கள் ஆடம் பரச் செலவுகளைக் குறைத்து சாதாரண மக்களைப் போல் வாழ வேண்டும். தேர்தல் முறையில் மாற்றம் வேண் டும். தொழில்கல்வி, இந்தியா முழுவதும் மதுவிலக்கு என்று பன்னிரெண்டு கோரிக்கை களுடன் யூலை 27ஆம் நாள் தனியாளாக உண்ணா விரதத்தைத் துவக்கினார். அப்போது அந்த இடம் விருது நகரிலிருந்து தூரத்தில் ஆட்கள் நடமாட்டமில்லாத பகுதியாக இருந்ததால் பொதுவுடைமைக் கட்சியினரின் ஆலோசனை யின் பேரில் விருதுநகர் தேசபந்து மைதானத்தில் உண்ணா விரதத்தைத் தொடங்கினார்.அப்போதிருந்த காங்கிரஸ் அரசு சங்கரலிங்கனாரின் கோரிக்கைகளை ஏற்கவில்லை. பல தலைவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தச் சொல்லிக் கோரிக்கை விடுத்தனர். இருந்தும் உண்ணாவிரதம் நிறுத்தப்படவில்லை.நாளாக நாளாகச் சங்கரலிங்கனாரின் உடல்நிலை மோசமானது. "பொதுஜனங்களின் விருப்பத் திற்கு மாறாகத் தவறான வழியில், கண்மூடித்தனமாகப் போய்க் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சி ஒழிந்தே தீரும். அறிவுத் திறன் இருந்தால் திருத்திக்கொள்ளட்டும்" என்று 'எச்சரிக்கையுடன்' கடிதம் எழுதிய சங்கரலிங்கனாரின் உண்ணவிரதப்போராட்டம் 76 நாட்கள்வரை தொடர்ந்தது. 1956ஆம் ஆண்டு ஒக்ரோபர் 13ஆம் நாள் அவருடைய உயிர் பிரிந்தது. சங்கரலிங்கனாரின் 'தமிழ்நாடு' பெயர் சூட்டுவது குறித்த கோரிக்கைக்கு அவருடைய மறைவுக்குப் பிறகு அழுத்தம் கொடுக்கப்பட்டு பல இயக்கங்கள் அந்தக் கோரிக்கைகளை முன்வைத்தன. 1968 யூலை 18ல் சென்னை மாநிலத்தை 'தமிழ்நாடு' ஆகப் பெயர் மாற்றம் செய்யும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. 1968 நவம்பர் 23இல் தமிழ்நாடு பெயர் மாற்ற மசோதா நாடாளு மன்றத்தில் நிறைவேறியது. இதையடுத்து 1968 டிசம்பர் 1ஆம்நாள் தமிழ்நாடு முழுக்கப் பெயர் மாற்றம் விழாவாகக் கொண்டாடப்பட்டபோது "சங்கரலிங்கனாருக்கு நன்றியும் வணக்கமும்" தெரிவிக்கப்பட்டது. சங்கரலிங்கனாருக்கு முன்பாக, இந்திய வரலாற்றில் 1952 டிசம்பர் 15 ஆம் நாளில் இன்னுமொரு அறவழி உண்ணாநிலைப்போராட்டம் பற்றிய பதிவு காணப்பட்டது. பொட்டி சிறீராமுலு ஒரு இந்திய விடுதலைப்போராட்ட வீரராவார். காந்தியின் அகிம்சை வழியைப் பின்பற்றியவர். தனது வாழ்வின் பெரும்பகுதியை ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பாடுபடுவதில் செலவிட்டவர். ஆந்திரப் பிரதேச தனிமாநிலத்தை உருவாக்க வேண்டும் எனக் கோரி 1952 ஒக்ரோபர் 19ஆம் நாள் தொடங்கி 62 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து 1952 டிசம்பர் 15 ஆம் நாளில் உயிர் நீத்தார்.

அவரின் ஈகச்சாவு மக்களை எழுச்சி கொள்ள வைத்தது. அதனையடுத்து அன்றைய பிரதமர் நேரு 1952 டிசம்பர் 19ஆம் நாள் தெலுங்கு பேசும் மக்களுக்கு தனி மாநிலம் அமைக்கப்படும் என அறிவித்தார். அண்மையில் தெலுங்கான தனியாகப் பிரிந்த நிகழ்வு நடந்தது.

1981ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் நாள் இன்னுமொரு அறவழி உண்ணாநிலைப் போராட்டம் உலகவரலாற்றில்


பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். ஐரிஸ் குடியரசுப் படையினரை அரசியற் கைதிகளாக ஏற்கவேண்டும் எனக் கோரி. பிரித்தானிய அரசுக்கெதிராக உண்ணா நோன் பிருந்து உயிர்நீத்த வடஅயர்லாந்தைச் சேர்ந்த பொபி சாண்ட்ஸ் தனது தோழர்கள் 10பேருடன் உண்ணா நோன்பிருந்தார். 66ஆம் நாள் தம் இன்னுயிர்களை அவர்கள் அறவழியில் ஈகம் செய்தனர். இவர்களின் ஈகச்சாவுகள் ஐரிஷ் குடியரசு இராணுவ (IRA) அமைப்புக்கு மனவலிமையைக் கொடுத்தது. பல தன்னார்வலர்கள். இந்த அமைப்பில் இணைந்து கொண்டனர். இவர்களுக்கு ஆதரவாக அனைத்துலக ரீதியில் பலத்த குரலெழுப்பப்பட்டன. இதைத்தொடர்ந்து பல முன்னேற்றங் களை அந்த மக்கள் கண்டுள்ளனர்.

உலக வரலாற்றுப் பதிவேட்டில் அடுத்து 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26ஆம் நாள் பதிவு. இது எமது தமிழர் தாயகத்தின் மைந்தன் திலீபனால் பதியப்பட்டதாகும். இப்போராட்டம் மற்றைய போராட்டங்களில் இருந்து மிகவும் வித்தியாசப்படுகிறது.அவர். ஒரு துளி நீரும் அருந் தாமல் உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த தியாகி. இலங்கை அரசுக்கெதிராக தமிழர் தாயகத்தில் தேசியப்போர் ஆயுதம் தாங்கியதாக இருந்த காலகட்டத்தில்-ஈழத் தமிழர்களை காப்பாற்ற வந்ததாகச் சொன்ன, இந்திய அமைதிப்டை, ஈழமக்களுக்கும் ஈழப்போராளிகளுக்கும் எதிராக, இலங்கை இராணுவத்தினரும் ஒட்டுக்குழுக்களும் செய்த அநீதிகளை கண்மூடிப் பார்த்துக் கொண்டிருந்த போது- இந்திய வல்லாதிகத்திடம் நீதிகேட்டு அமைதிவழிப் போராட்டத்தை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.


தமிழீழ விடுதலைப் புலிகளின் அன்றைய அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் அவர்கள், தானே போராட்டத்தை முதலில் தொடக்கிவைப் பதற்கு எண்ணினார். எந்த காந்தியின் போராட்டத்தால் தமது நாடு விடுதலை பெற்றதாக இந்திய அரசு சொல்லி வருகின்றதோ, அந்த தேசத்தந்தை மகாத்மா காந்தியின் அறவழியிலான படைக் கலனை தியாகி திலீபன் கையிலெடுத்தார். திலீபன் அவர்கள் 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் நாள் ஒரு சொட்டு நீரும் பருகாத உண்ணாநோன்பு போராட்டத்தை தொடங்கினார். தியாகி திலீபன் முன்வைத்த ஐந்து கோரிக்கைகளும் மிகவும் அடிப்படையானவை. அவையாவன:

1) மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்குகிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.
2) சிறைக் கூடங்களிலும் இராணுவ.காவல் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.
3) அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.
4) ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.
5) தமிழர் பிரதேசங்களில் புதிதாக காவல் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்பனவாகும்.

அணு.. அணுவாக திலீபன் அவர்களின் உயிர் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால், ஈரம் துடைத்தெறிந்த இந்திய ஆட்சியாளர், அமைதியாக வேடிக்கை பார்த்திருந்தனர்.12ஆம் நாள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமலே பார்த்திபனின் உயிர் பிரிந்தது. வீரச்சாவுக்குமுன் தியாகி திலீபன் ஆற்றிய இறுதி உரையில் "என் மனம் மகிழ்ச்சியில் மிதக்கின்றது. நீங்கள் பல்லாயிரக்கணக்கில் இந்தப் புரட்சிக்குத் தயார்பட்டு விட்டதை என் கண்கள் பார்க்கின்றன. நான் திருப்தி அடைகிறேன். நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற ஒவ்வோர் மக்களும் இந்தப் பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும். எனது இறுதி ஆசை இதுதான்" என சொல்லிச்



சென்றார். அந்த மக்கள் எழுச்சி பல வடிவங்களில் இடம் பெறுவதை எமது மண்ணில் பார்க்கின்றோம். நமக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்றால் நாம்தான் போராட வேண்டும் என முடிவெடுத்து போராடும் மக்களின் போராட்டம் எம் கண்முன்னே இன்று தொடர்கின்றது. அவர்கள் வன் முறையில் இறங்கவில்லை. அமைதி வழியான அறப் போராட்டங்களையே தொடர்கின்றார்கள். தமக்கு நிச்சயம் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை கைவிடாமல் உறுதியோடு போராடுகிறார்கள்.



திலீபனின் வழியில் அடுத்ததாக அன்னை பூபதியின் உறுதியான உண்ணாநிலைப் போராட்டம். அமைதிப்படை என வந்து மக்களை அழித்த இந்திய இராணுவத்துக் கெதிராக, மட்டக்களப்பில் நாட்டுப் பற்றாளர் அன்னைபூபதி அவர்கள் 1988 மார்ச் 19ஆம் நாள் தனது உண்ணாநோன்பினைத் தொடங்கினார். இந்தியப் படை உடனடியாகப் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, தனது "சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமிருக்கிறேன். நான் சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது" எனக் கடிதம் எழுதி வைத்த உறுதி குலையாத அறப்போராளி இவர். கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின் 1988 ஆம் ஆண்டு ஏப்பிரல் 19இல் மக்களுக்காய் இன்னுயிரை தியாகம் செய்தார். அறப்போராட்டங்கள்வலிமையானவை. உறுதி குலையாமல், "நம்பிக்கை தளராமல்நாம்நடத்தும்போராட்டங்கள் வெற்றிபெறும்" என்ற மக்களின் நம்பிக்கை பொய்க்காது.

# பசியோடு இரு...?

**நுண்கடன் நிறுவனங்களின் இடுக்கிப்பிடியில் இருந்து மீள்வதற்கு தற்கொலை தீர்வாகுமா?**



**"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு."**

மிக்க பசியும், ஓயாத நோயும் அழிவு செய்யும் பகையும் தன்னிடம் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடாகும்.

ஆனால்,இன்று எமது நாட்டில் நாம் எப்படியான வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்?

ஒவ்வொரு நாட்களும் சாவோடு போராடும் நாட்களாகிவிட்டன. உணவுப் பொருட்கள், எரிபொருட்கள் என்பவற்றின் விலை சில மாத இடைவெளிகளில் அடிக்கடி உயர்ந்துவிடுகிறது. வேலையில்லாப் பிரச்சினை ஓய்ந்தபாடில்லை. இந்த நிலையில் அரைவயிறு, கால்வயிற்று உணவோடுதான் பெரும்பாலான மக்கள் காலந்தள்ளுகின்றனர். பசி என்னும் கொடிய நோயால் தடம் மாறிவிடுவோமோ என்ற அச்சத்தை மனதில் சுமந்து தத்தளிக்கும் ஒரு குமுகாயமாக மாறிவிடும் ஆபத்தை நோக்கி நாம் நகருகிறோம்.

'பெண்கள் நாட்டின் கண்கள்' என பெண் பெருமை பேசுவோர் முழங்குவதை கேட்கின்றோம். ஆனால், இன்று எமது மண்ணிலே அந்தக் கண்களில் எந்த நாளும் கண்ணீர் மட்டும் தானே பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது. அவர்கள் வேதனை ஓலத்தை கேட்க எவருமேயில்லாத அவலம் இன்று தமிழர் தேசத்தில் தொடர்கிறது.

ஒருபக்கத்தில் காணாமல் போக்கடிக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடித்தருமாறு நீதி வேண்டிப் போராடும் பெண்கள்.

பறிக்கப்பட்ட தமது நிலங்களை தமக்கு வழங்குமாறு தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்கும் பெண்கள் மறுபக்கத்தில்.

இது தவிர வாழிடம் இருந்தாலும் உழைக்க வழியின்றி குடும்பத்தை எப்படிக் காப்பாற்றுவது எனத் தவிக்கும் பெண்கள் இன்னொரு திசையில்.

இவ்வாறுதான் இன்று எமது மண்ணில் வாழும் பெண்களை வகைப்படுத்தலாம்.

அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வது என அறியாது தத்தளிக்கும் கொடுமைக்குள் தள்ளப்பட்டிருக்கும் குடும்பங்கள் தான் அதிகம்.

மேற்கண்டவாறு வாழ்விடம், உழைப்பு, வருமானம் எதற்குமே வழியில்லாத நிலையில் இக்குடும்பங்களில் குழந்தைகளின் உடல்நலம் சொல்லத்தேவையில்லை. முதியவர்களின் நிலை அதைவிடப் பரிதாபம். பிள்ளைகளின் கல்வி நிலை மிக மோசமான நிலையை நோக்கிச் செல்கிறது.

இத்தனை கொடுமைகளில் இருந்தும் மீள்வது எப்படி என சிந்தித்து தவித்துக் கொண்டிருக்கும் குடும்பங்களை கட்ட சிக்கவைக்கும் பொறிதான் நுண்கடன் திட்டம். இதற்குள் சிக்குண்டு அதனால் சீரழிந்து தற்கொலையே தீர்வு என அதனை நாடிச் செல்வோரின் தொகையும் அதிகரித்துக் கொண்டே போகின்றது. ஆனால் இதற்கு தீர்வு என்ன என்று கேட்டால் பதில் சொல்ல எவருக்கும் தெரியவில்லை.

நலிவுற்ற மக்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்களில் ஒன்று நுண்கடன் திட்டம் எனப்படுகிறது.

நுண்கடன் என்பது அரசு அல்லது தனியார் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களினால் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் சிறியளவான பணத்தொகையாகும்.

நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் பெண்களை இலக்காகக் கொண்டே கடன் வழங்கிவருவதாக தெரிவிக்கப்படுகிறது. ஒரு சில நிறுவனங்கள் பெண்களுக்கு மட்டுமே கடன் வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றன என்றும், அவை திட்டமிட்ட முறையில் பெண்களை தங்களுடைய கடன் வலைக்குள் சிக்கவைக்கின்றன எனவும் கூறப்படுகிறது.

நுண்கடன் வழங்கும் நிறுவனம் முகவர் ஒருவரை ஊருக்குள் அனுப்பி முதலில் ஒரு பெண்ணை தெரிவு செய்கிறது. பின்னர் அந்தப் பெண்ணின் மூலமாக ஒரு பெண்கள் குழுவை உருவாக்கின்றார். மூன்று அல்லது ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட உறுப்பினரைக் கொண்ட குழு உருவாக்கப்படும். குறித்த அந்த பெண் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக தன்னுடைய உறவினர்களையோ அல்லது கிராமத்தவர்களையோ அக்குழுவில் இணைத்துக் கொள்கிறார்.

இப்போது இவர்கள் அனைவரும் எடுக்கும் கடனை வாராந்தம் செலுத்துவதாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால்

ஒருவர் தமது கடனை செலுத்தத் தவறினால், குழுவில் உள்ள ஏனையவர்கள் அவருக்காக அக்கடனை அடைக்கவும் ஏற்றுக்கொண்டே கடன்பெறுகிறார்கள். குழுவில் ஒருவர் தமது கடனை அந்த வாரத்தில் வழங்க முடியாத நிலை ஏற்பட்டால், குழுவில் உள்ள ஏனையோராலும்,கடன் அறவிட வரும் முகவராலும் தொந்தரவுக்கு உள்ளாக்கப்படுகிறார்.

வடமாகாணத்தில் இந்த நுண்கடன் செயற்பாடுகளினால் இந்த ஆண்டில் 59க்கும் மேற்பட்ட தற்கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன என்றும் கிழக்கு மாகாணத்தில் 37 வரையான தற்கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்கொலை செய்யும் நிலைக்கு ஏன் இவர்கள் தள்ளப்பட்டார்கள்? கடன் எடுக்க வேண்டிய நிலை ஏன் இவர்களுக்கு வந்தது? கடனை அடைக்க முடியாத நிலை எதனால் ஏற்பட்டது.? இதற்கான தீர்வு உள்ளதா? என பல கேள்விகள் எழுந்து ஆட்டிப் படைக்கின்றன.

பொதுவாக வங்கிகளில் கடனுக்கு 8 விழுக்காடும், சுயதொழிலிலுக்கான கடனுக்காக 14 விழுக்காடும் என வட்டி அறவிடப்படுகின்றது. ஆனால், நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் பெருமளவில் வட்டியை அறவிடுகின்றன எனவும், 40 இலிருந்து 220 விழுக்காடு வரை வட்டியை இந்த நிதிநிறுவனங்கள் அறவிடுகின்றன எனவும் சொல்லப் படுகின்றது. இப்படியான வட்டியுடனான கடனை தம்மால் மீளச்செலுத்த முடியாது எனத் தெரிந்தும் இப்படியான கடன் சிக்கலுக்குள் ஏன் இவர்கள் மாட்டிக்கொள்கிறார்கள்?

2009ஆம் ஆண்டின் பின் தமிழ்மக்களின் வாழ்வே தலைகீழாக மாற்றப்பட்டு விட்டது.பொருளாதாரத்தடை இருந்த காலத்தில் கூட, தமது உழைப்பினால் உயர்ந்து நின்ற மக்கள் இன்று இப்படியான கொடியநிலைக்கு தள்ளப் பட்டிருக்கிறார்கள்.

மூன்று வேளையும் உணவு உண்பவர்களில் எத்தனை பேர் ஒரு வேளை உணவுக்காக தத்தளிப்பவர்களின் நிலையை புரிந்து கொள்கிறார்கள். இந்த கொடிய பசிதானே இன்று பல பேரிடம் கெஞ்சி மன்றாடி வாழும் நிலைக்கு இவர்களை தள்ளியது.

எமது மக்கள் உழைத்து வாழ விரும்புவர்கள். ஆனால் இன்று உழைப்புக்கு என்ன செய்வது என்ற நிலையல்லவா தொடர்கிறது. மனிதனின் அடிப்படை தேவைகள் உணவு, உடை, வாழ்விடம். ஆனால் இந்த மூன்றும் நிரந்தரமாக கிடைக்க வழியற்ற வாழ்வுதான், பெரும்பாலான எமது மக்களின் இன்றைய நிலை.

ஆயுதமுனைப் போராட்டம் முடிவுக்கு வந்த நிலையில் முதன்தலாக தமிழர் பிரதேசங்களில் அவசர அவசரமாக நுழைந்தவை இந்த தனியார் நிதி நிறுவனங்கள் என சொல்லப்படுகின்றது. உழைப்புக்கு வழியின்றி, பசியோடு போராடிக் கொண்டிருப்பவர்கள் இந்த நிறுவனங்களின் பொறிகளுக்குள் சிக்குண்டு போனார்கள்...

இறுதியில் அதிகளவிலான வட்டியுடனான கடனை வாராந்தம் கட்டியே ஆக வேண்டிய அவலத்தில் நிறுத்தப்பட்டுள்ளார்கள். பசித்திருக்கும் மனிதனால் வேறு எதனைப் பற்றியும் சிந்திக்க முடியாது. அதனால் பசியோடு அவர்கள் போராடிக் கொண்டே இருக்கவேண்டும் என்பது திட்டமிடப்பட்ட ஒன்றோ?

பசிக் கொடுமையிலிருந்து தப்பவும்,பிள்ளைகளின் படிப்புக்கும், நாளாந்த வாழ்வுக்குமென கடன் வாங்கியவர்கள், இன்று அவற்றுக்காக பணத்தை செலவு செய்ய முடியாமல் எடுத்த கடனை வட்டியோடு மீளச் செலுத்த வழி தேடி போராடிக் கொண்டிருக்கிறார்கள். அன்றாட வாழ்க்கையை சமாளிக்கவே முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் இந்த மக்கள் தொடர்பாக வானொலி, தொலைக்காட்சி, புதினத்தாள்கள் மற்றும் இணையங்கள் என எல்லா ஊடகங்களும் தொடர்ந்து தகவல்களை வெளிப்படுத்தி வருகின்றன... இவர்களின் தற்கொலைகள் இவ்வாறு தொடர்வதனை தடுக்க வழிகள் என்ன என ஆய்வுகளும் தொடர்கின்றன. கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன.

அந்த வகையில், அண்மையில் கொழும்பு தொலைக் காட்சி ஒன்றில் நுண்கடன் தொடர்பாக தான் அநுபவிக்கும் துயரங்களை ஒரு பெண் எடுத்துச் சொன்னார். முல்லைத்தீவில் வசிக்கும் அந்த பெண் நுண்கடன் நிறுவனத்திடமிருந்து தாம் நாற்பதினாயிரம் கடன் பெற்றதாகவும், தனது கணவர் போரில் காயப்பட்டவர் எனவும்,தமக்கு மூன்று பிள்ளைகள் எனவும், மாற்றுத் திறனாளியான தனது கணவருக்குப் பொருத்தமான நல்ல வேலையோ சிறந்த வருமானமோ இல்லாத நிலையில் தன்னால் தனியாக கடனை அடைக்க முடியவில்லை. ஆனால், கடனை உடனே செலுத்தச் சொல்லி, கடனை அறவிடுவோர், இரவு 11 மணிவரை வீட்டிலேயே நிற்கிறார்கள் என மிகவும் மனம் வெதும்பத் தெரிவித்தார்.

அதே நிகழ்ச்சியில் மற்றுமொரு பெண் தனது பிரச் சினையை சொல்லும் போது, தானும் கடன் எடுத்ததாகவும், கட்ட வேண்டும் என்பது தனக்கு தெரிகிறது என்றும், ஆனால் தனது கணவன் போதிய வருமானம் ஈட்டுவதற்கு தகுந்த உடல்நலத்துடன் இல்லை என்பதனால் கடனை மீளளிப்பதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும், ஆனால் காலையிலேயே கடனை செலுத்த வற்புறுத்தி கடன் அற விடுவோர் வீட்டில் வந்து



இயலாவிட்டால் ஏன் கடன் எடுத்தீர்கள் என்று வேண்டாத வார்த்தைகளால் ஏசுவதாகவும் குறிப்பிட்டார்.

வவுனியா கோயில்குளத்தில் வசிக்கும் ஒரு பெண் தனது மருத்துவ செலவுக்காக எடுத்த நுண்கடனை மீள செலுத்த முடியாமல் தவிக்கும் கொடுமை பற்றி இணையம் ஒன்று தகவல் வெளியிட்டிருந்தது. அந்த பெண் தயிர்க்கடை ஒன்றை நடத்திவருகின்றார். ஆனால் அதில் கிடைக்கும் வருமானத்தை நுண்கடனை மீளச்செலுத்த பயன் படுத்துவதா அல்லது தன் குழந்தைக்கு பால்மா வாங்கப் பயன்படுத்துவதா எனத் தெரியாமல் தத்தளிக்கிறார் என அந்த இணையச் செய்தி குறிப்பிட்டிருந்தது.

குழந்தைக்கு பால்மா வாங்கினால் கடன் அறவிடுவோர் தகாத வார்த்தைகளால் மிகவும் இழிவாக திட்டுவார்கள் என்றும்,தொலைபேசியில் தொடர்ந்து மிரட்டிக் கொண்டே இருப்பார்கள் என்றும் வேதனையுடன் சொல்லும் இப் பெண்ணின் மனநிலையில் தான் இன்று நுண்கடன் எடுத்தவர்கள் பலர் வாழ்கிறார்கள். நுண்கடன் பெற்றவர்களின் இந்த உடல், உள பாதிப்பிலிருந்து அவர்களை எப்படி மீட்கலாம் என சிந்தித்து செயலாற்ற வேண்டியது எமது குமுகாயத்தின் பொறுப்பாகும்.அந்த வகையில் குமுகாய அமைப்புகளும் தமக்கான பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

தமிழ்மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் அரசியல் வாதிகளுக்கு இந்த மக்களை நுண்கடன் திட்ட கொடுமை யிலிருந்து மீட்க வேண்டிய பெரும் பொறுப்பு உள்ளது. ஆனால் அவர்கள் தமது பொறுப்பினை உணர்ந்து செயலாற்றாத நிலையில் குமுகாய அமைப்புக்கள் இதற்கான தீர்வுகளுக்கான வேறு வழிகளை தேடிக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் சில மக்கள் அமைப்புக்கள் தாமே சில வழிகளால் முயல்கின்றார்கள். அண்மையில் வவுனியாவில் ஒரு முயற்சி நடந்தது. வவுனியா சாந்தசோலை கிராமத்தில், கடனை அறவிடவந்த நிதிநிறுவன பணியாளர்கள் விரட்டி யடிக்கபட்ட நிகழ்வு அது. அங்குள்ள மாதர் சங்கமொன்று இனி தமது கிராமத்துக்கு அவர்கள் கடன் கொடுக்கவோ, அறவிடவோ வரக் கூடாது என்றும், கடன் பெற்றவர்கள் அவர்களின் இடத்துக்கு வந்து கடனை மீள செலுத்துவார்கள் என்றும் நிலைமையை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைக்க மாதர் சங்கம் முனைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உண்மை யில் இந்த முயற்சியின் பின்தளத்தில் யார் இருந்தார்களோ என்பதற்கு அப்பால், இச்சமயத்தில் சாந்த குளம் குமுகாயத்தினர் ஒற்றுமையுடனும் ஆற்றலுடனும் செயற்பட்டு கடன் பெற்ற பெண்களுக்கு ஒரு ஆதரவைக் காட்டியுள்ளனர். அவர்கள் விரக்தியின் விளிம்பிற்கு செல்வதை அவர்கள் தடுத் திருக்கிறார்கள். நுண்கடனால் தொடரும் தற்கொலைகளுக்கு முடிவு கட்டவேண்டும் என்ற முனைப்பில், மாதர் சங்கத்தால் எடுக்கப்பட்ட இந்த முயற்சி மிகவும் துணிகரமான செயற்பாடு. ஆனால், இது ஒரு தற்காலிகமான தீர்வுமட்டும் தான். முழுமை யான தீர்வு காண்பதற்கு இதற்கு மேலும் போராட்டங்களும் செயற்பாடுகளும் அவசியமாக உள்ளன. முதலில் தொழில்வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும். உழைப்பதற்கான வழி இல்லாமல் எப்படி கடனை மீளச் செலுத்த முடியும்?

இலங்கையின் 25 மாவட்டங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு,திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்கள் கொடிய வறுமை மாவட்டங்களாக இனங் காணப்பட்டிருப்பதாக, இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்புப் பிரிவின் குழுத்தலைவர் ஆர். சிறிபத்மநாதன் தெரிவித்திருந்தார்.

இந்த மாவட்டங்களில் உள்ளவர்களின் வாழ்வாதார தொழிலாக விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு ஆகியவை உள்ளன. மேலும், இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பால், நெல், கடல் உணவுகள் அப்படியே மாவட்டங்களை விட்டு வெளியே செல்கின்றன. அதாவது இந்த மூலப்பொருட்கள் பல்தேசிய வியாபார நிறுவனங்களிடம் அல்லது பெரும் முதலாளிகளிடம் சென்று, மாசுகலந்த முடிவுப்பொருட்ளாக மீண்டும் அதிக விலையுடன் உற்பத்தியில் உழைத்த மக்களிடம் வந்து சேர்கிறன்றன.

மாறாக, மூலப்பொருளை முடிவுப்பொருளாக்கும் தொழில் நிலையங்களை நிறுவி, மனித வளத்தைப் பயன்படுத்தி பல முடிவுப் பொருட்களை உற்பத்திசெய்து மக்கள் நுகர்வதற்கு சிறந்த பொருட்களை வழங்குவதனூடாக வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் பொருட்களின் விலையும் குறைவாக இருக்கும்.

கடந்த இருபது முப்பது வருடங்களுக்கு முன் பெண்கள் செய்த எத்தனையோ கைத்தொழிகள் கைவிடப்பட்டுவிட்டன. காய்கறி வற்றல் உற்பத்தி, பனையோலைப்பொருட்கள் உற்பத்தி, கருவாடு உற்பத்தி, பனங்கட்டி உற்பத்தி, கிடுகு இழைத்தல் போன்ற இன்னோரன்ன பெண்களின் கைத் தொழில்கள் வழக்கொழிந்து வருகின்றன. கோழிவளர்ப்பு ஆடுவளர்ப்பைக்கூட கைவிட்டு வருகின்றனர். இவற்றை மீள செயற்படுத்த குமுகாயத்தின் எல்லாத் தரப்பினரும் முன் வரவேண்டும்.


மக்களது காணிகள், பெருமளவில் படையினர் கைய கப்படுத்தி வைத்துள்ளனர் அவர்களின் வேளாண்மைக் காணிகள், நீர்நிலைகள் என பெரும்பாலானபகுதி படை யினரின் பிடிக்குள் அகப்பட்டுள்ளன. மக்களின் வருமான ஊற்றுகள் பறிக்கப்பட்ட நிலையில் அவர்களால் என்ன செய்ய முடியும்.

இதற்கு அழுத்தம் கொடுத்து அக்காணிகளை மீட்டுத் தரவேண்டியவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான். ஆனால், அவர்களின் செயற்பாடுகள் நம்பிக்கையூட்டுவனவாக இருக்கவில்லை. அதனால் தளர்ந்து விடமுடியுமா?

தொடரும் தற்கொலைகள் நிறுத்தப்படவேண்டும், பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படவேண்டுமென்றால் காணாமல் போக்கடிக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடித் தருமாறு நீதி வேண்டிப் போராடும் போராட்டம், நிலப் பறிப்புக்கெதிரான போராட்டம், நுண்கடன் திட்டத்துக்கு எதிரான போராட்டம் என்று தொடரும் போராட்டங்கள் எல்லாம் குமுகாய மயப்படுத்தப்படவேண்டும். சிந்தனை மாற்றங்கள்தான் இந்த மக்கள் போராட்டங்களை மேலும் வலுவாக்கும். இதேபோன்று புலம்பெயர்தமிழர் அமைப்புகளும் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயற்படவேண்டும். நீதிக்காக போராடும் தமிழ்மக்களின் போராட்டத்தை அனைத்துலகத்தின் முன்னால் கொண்டு செல்லவேண்டும். நீதி கிடைக்கும் வரை ஓயாமல் ஒற்றுமையுடன் உழைக்கும் பணி தமக்கு உள்ளது என்பதை புலம் பெயர்தமிழர்கள் அமைப்புகள் உணர்ந்து செயற் படுவதுடன் அவர்களால் தாயகத்து மக்களுக்கு கிடைக்கும் நிதி சிறந்த விளைவைத்தரும்படியாக செயற்படுத்தப்படுகிறதா? என அவர்கள் கவனமெடுக்க வேண்டும். அவ்வாறு திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் அவர்களின் உதவி தாயகத்தில் கையாளப்படுமாயின் நுண்கடன் பிரச்சினை களிலிருந்து பெண்களை மீட்பதில் இவ்வமைப்புக்களின், குழுக்களின் பங்கும் காத்திரமானதாக அமைய முடியும்.

-தங்காமணி

# கத்தரிக்காயின் மருத்துவ பயன்கள்



> கத்தரிக்காயையும் வேறு காய்கறிகளையும் வீட்டுத் தோட்டத்தில் பயிரிடுவோம். சேதனப்பசளைகளை பயன்படுத்துவோம். இயற்கையான பூச்சிகொல்லிகளைப் பயன்படுத்துவோம். செயற்கை இரசாயனங்களைத் தவிர்ப்போம். நமது பிள்ளைகளுக்கு நச்சுத்தன்மைகள் கலக்காத சத்தான உணவை நமது கைகளால் நாமே பரிமாறுவோம். அவர்கள் ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் இயற்கையோடு இணைந்து இன்பமாய் வாழட்டும்.

## பூமியைப்போல் உடலும்...

நம் உடலில் உள்ள நீர்நிலைகளின் அளவு 75% இந்த பூமியில் உள்ள நீர்நிலைகளின் அளவும் 75% . பூமியிலிருந்து தோன்றிய உடல் பூமியின் பிள்ளையாகவே கருதப்படுகிறது. பூமிக்கு நாம் சொல்லும் அத்தனை அறிவியல் விதிகளும் உடலுக்கும் மிகத்துல்லியமாக பொருந்தும்.

பூமியில் 75% கடல் நீர். அதன் உப்புத் தன்மையால் அது நமக்கு உடலுக்கு நேரடியாகப் பயன் அளிப்பதில்லை. அந்த உப்பு நீர் மழையாக மாறி நிலத்திற்கு வரும்போது அது பயன் தரக்கூடியதாக மாறுகிறது. அது போல் நம் உடலில் 75% (பிளாஸ்மா) குருதித் திரவவிழையம். இதற்கும் கலவிடைச்சாறு, கலச்சாறுகளுக்கிடையில் தொடர்புள்ளது.

ஒவ்வொரு உடற்கலத்திலும் நீர் உள்ளது. நமது உடலில் உள்ள நீரின் உப்புத்தன்மை சரியான அளவில் இருந்தால் மட்டுமே அது நமக்குப் பயன்படும். எனவே உப்புதன்மை அதிகமானால் ஒவ்வொரு கலமும் பாதிப் படையும். முக்கியமாக கலத்தின் வளர்ச்சி பாதிக்கப்படும். கலம் வளர்வதற்கான சூழ்நிலை அமையாது மிகவும் போராட்டத்திற்குள்ளாகும்.

## சிறுநீரகத்தின் பணி

உப்புத்தன்மை உடலில் அதிகமானால் நீர் ஓட்டம் இருக்காது. உப்பு ஆங்காங்கே தங்குவதால் உடலில் அழுத்தம் ஏற்படும். எனவே தேவையற்ற அதிகப்படியான உப்பை நாம் வெளியேற்றியே ஆகவேண்டும். நாம் உண்ணும் உப்பு சுவையூட்டிகளில் உள்ள உப்பு (அஜீனோ மோட்டோ) மருந்துகளில் உள்ள இரசாயனம், காற்றில் உள்ள விஷத்தன்மை இவைகள் அனைத்தும் குருதியில் கலக்கின்றன. இவைகள் அனைத்தையும் அழித்து உடலிலிருந்து வெளியேற்ற வேண்டும். இந்த சுத்தப் படுத்தும் முக்கிய பணியை நமது சிறுநீரகம் செய்கின்றது. இந்த சிறுநீரகம் அல்லாமல் உடலின் ஒவ்வொரு கலமும் கூட இந்த பணியினை செய்கின்றது. சிறுநீரகம் என்பது தலைமையகம். உடல் முழுவதும் வேலை செய்யும் கலங்களால் சீர்ப்படுத்த முடியாத வேலையினையும் சிறுநீரகம்சேர்த்து செய்யும். சிறுநீரகத்தின் மூலம் சுத்தப்படுத்தப்பட்ட நீர்நிலைகள் உடம்பின் வளர்ச்சிக்கு தேவைப்படுகின்றது. அதில் விஷங்கள் இருப்பின் அது உடலை சீரழிக்கும்.

எனவே விசங்கள் அழிக்கப்படல் முக்கியமானது. இதனால் உடலுக்கு எதிர்மறையான நஞ்சுகளை அழிக்கும் ஆற்றல் வேண்டும். நஞ்சுகள் அழிக்காமல் இருந்தால் அவை ஓரிடத்தில் தேக்கமுறும். நமது உடலானது நீரை பெறுவதும். நீரை செரிப்பதும், நீரை வெளியேற்றுவதும் நின்றுவிடும். எனவே இந்த பிரச்சினைகளை உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்பும் அனுபவிக்கும். இந்தச் சிக்கல்களை களைவதில் கத்தரிக்காய் முக்கியமான பங்காற்றுகிறது.

## கத்தரிக்காயின் நன்மைகள்

நோய் தொற்று காரணத்தினால் -உடலில் உள்ள நீர்நிலைகள் நரம்புகளோடு தொடர்பு கொள்ளும்போது பாதிப்பு ஏற்படும். அந்த நீரில் உள்ள உப்பு, அமீபா,காளான், பூஞ்சானம் போன்ற எந்த கிருமிகளாலும் நரம்புகளில் பாதிப்பு ஏற்படலாம். எனவே நரம்புகளில் பாதிப்பு ஏற்பட்டு கைகளில் நடுக்கம் ஏற்படும். இந்த நடுக்கம் ஏற்பட முக்கிய காரணம் நமது உடலில் உள்ள நீர்நிலைகள் கெட்டுப் போய் நரம்பினில் பாதிப்பை ஏற்படுத்தும். அதிகப்படியான உப்பானது நரம்பின் மேல் உள்ள தோலை அரித்துவிடும். கை நடுக்கத்திற்கு நாம் நரம்பு வைத்தியரை சென்று பார்ப்போம். ஆனால் இதற்கு அடிப்படையான காரணம் சிறுநீரகத்தில் உள்ள பிரச்சினையின் பாதிப்பு நரம்பில் வெளிப்படுவது. நரம்புகள் நன்றாக உள்ளன. ஆனால் நரம்புக்கு வேண்டிய சூழ்நிலையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த சிறுநீரக மண்டலமானது மற்றய 11 மண்டலத்திற்கும் உதவி செய்கிறது. மற்றய 11 மண்டலங்களும் சிறுநீரகத்திற்கு உதவி செய்கின்றன. அப்படி உதவி செய்வதால் மட்டுமே உடலானது சரியான முறையில் இயங்க முடியும். நரம்புகளின் பாதிப்பால் ஏற்படும் கைநடுக்கம் சிறுநீரகத்தால் ஏற்படுகிறது.

கண்களின் உட்புறம் நீர் உள்ளது. அதில் உப்புத் தன்மை ஏறிச்செல்கையில் ஒளி ஊடுருவும் தன்மை குறைந்துவிடும். சூரிய ஒளி கண்களில் படும்போது கூச்சம் ஏற்படும். ஒளியை அவர்களால் பார்க்க முடியாது. அதற்கு காரணம் நம் கண்களில் உள்ள நீர்நிலைகளின் தன்மை (கண்ணாடியுடநீர், நீர்மயவுடநீர்) மாறியிருக்கிறது. எனவே இதனை சரி செய்ய சிறுநீரகங்களின் செயல்பாடுகள் சரியான முறையில் இருக்க வேண்டும்.

காதுகளின் உட்புறம் நீர் அமைந்துள்ளது. நாம் நேராக நிற்பதற்கு இந்த நீரானது உதவி செய்யும் எனவே காதில் உள்ள நீரின் உப்பின் அளவு அதிகமானால் ஒரு அழுத்தம் இருப்பதாக உணர்வார்கள்.

உடலில் உப்புத்தன்மை அதிகமாகி கல்லீரலிலும் உப்புத்தன்மை அதிகரிக்கும். எனவே கல்லீரலானது அதை சுத்தப்படுத்த வேண்டி கொஞ்ச நேரம் சாப்பிடாமல் இருக்க சொல்லி நமக்கு அறிவுறுத்தும். அதுவே நமக்கு நாக்கில் கசப்பு சுவையாக தெரியும், கசப்பு சுவை தெரிகிறது என்றால் உணவை உண்ணக்கூடாது என்று அர்த்தம். அதாவது கல்லீரல் தன்னைத் தானே சுத்தப்படுத்தி கொள்கிறது என்று அர்த்தம். ஆனால் நமது உடலின் மொழி என்னவென்று தெரியாமல் மேலும் மேலும் நாம் உணவினை உட்கொண்டு விடுகின்றோம். நம்மால் இயற்கையை புரிந்து கொள்ள முடியவில்லை. கல்லீரல் என்னால் இயங்க முடிய வில்லை என்று கசப்பு சுவையை உணர்த்திய போதும் நாம் உணவினை உட்கொண்டு நம் உடலின் நல்ல இயக்கத்திற்கு எதிராக துரோகம் செய்கின்றோம்.

வெளியில் ஈரபதம் அதிகமானால் நமக்கு சளிபிடித்துக் கொள்கிறது. குளிர்காலத்தில் ஏற்படும் சளி என்பது வேறு. ஈரபதத்தினால் ஏற்படும் சளி என்பது வேறு- ஈரபதத்தினால் மூச்சு திணறல் ஏற்படும்.

பித்த நீர் நமது செரிமானத்திற்கு மிகவும் உதவுகிறது. கொழுப்பும், நீரும் சேர்ந்து தான் பித்த நீர் உருவாகிறது. பித்தப்பையில் உள்ள பித்த நீர் இறுகி கல்போன்று ஆகிவிடக் கூடாது. இதற்கு காரணம் உடம்பில் ஏற்படும் இரசாயண மாற்றத்தின் காரணமாக உடம்பில் அதிக உப்பு சேர்வதன் காரணமாக இறுகும் நிலை ஏற்படும். இதுவே பித்தப்பையில் கல் உருகுவதற்குக் காரணமாகிறது.

வயிற்றில், குடலில் சில சமயங்களில் சாப்பிட்ட உணவில் உள்ள அதிகப்படியான உப்பின் தன்மையானது குடலில் உள்ள தோலை அரிக்க ஆரம்பித்து விடும். தோலை அரித்து விடுவதால் உணவு செல்லும் போது மிகவும் சிரமப்பட்டு செல்லும். மேலும் குடலின் இயக்கத்திற்கு உப்பானது மிகுந்த பிரச்சனைகளை உருவாக்குகிறது. வலியுடன் மலம் போகும். உடலில் உப்புத்தன்மை அதிகரிக்க இதன் இயக்கம் பாதிக்கப்பட்டு ஒட்டு குடல் வர வாய்ப்புண்டு. இதற்கு காரணம் சிறுநீரக மண்டலத்தின் செயல்திறன் மட்டுப்படுதலாகும்.

அதிக உப்புத் தன்மையின் காரணமாக *சிறுநீரகத்தில் ஏற்படும் எந்தக் கற்களானாலும் கத்தரிக்காய் அதை கரைத்து விடும்.*

சிறுநீர் கழிக்கும் போது வலி, எரிச்சல் இருத்தல், அதிக உப்புத் தன்மையால் தோலில் பாதிப்புகள் ஏற்படுதல், காலில் ஆணி, கழுத்தில் மங்கு, முகத்தில் பருக்கள், ஏற்படுதல். இவை அனைத்திற்கும் தீர்வு கத்தரிக்காய். கத்தரிக்காயின் மூலமாக உடலில் உள்ள பல நஞ்சுகளை அழிக்க முடியும்.

**கத்தரிக்காயின் வேலையை கடுகு செய்யுமா?**

நமது நாட்டுக் கத்தரிக்காய் செய்யும் வேலையை கடுகு எண்ணை சிறப்பாக செய்யும். *பலவிதமான நஞ்சுகளையும் அழிக்கும் ஆற்றல் கடுகிற்கு உண்டு.*

நமது நாட்டின் பாரம்பரியமான நாட்டு கத்தரிக்காய்க்கு உடலில் உள்ள எந்த நஞ்சையும் அழிக்கும் ஆற்றல் உண்டு. இதற்கு இணையான பொருள் உலகில் இல்லை. அந்த கத்தரிக்காய் நமது கலாச்சாரத்தை விட்டு போய் விட்டது.

சுத்தமான கடுகு எண்ணையை 1 ஸ்பூன் எடுத்து 10நிமிடம் வாயில் வைத்திருந்து முழுங்கினால் உடலில் உள்ள கழிவுகளை எளிதில் நீக்க முடியும்.

இல்லையெனில் கத்தரிக்காய் சாப்பிட்டு உப்புத் தன்மையினை கரைக்க வேண்டும்.

தொகுப்பு- சுடர்

## கத்தரிக்காய் நமக்கு அளிக்கும் ஊட்டச்சத்துக்கள்.

செடியில் முட்டை காய்த்து தொங்குவதுபோல் கத்தரிக் காய்கள் தொங்குவதால் அதற்கு “எக்பிளான்ட்” என்ற பெயரும் உண்டு. கத்தரிக்காய் குறைந்த கலோரியும், நிறைய சத்துக்களும் அடங்கியது. எடையை குறைக்க விரும்புபவர்களுக்கு ஏற்றது. அதிலுள்ள சத்துக்களை அறிவோம்.

கத்தரிக்காயின் தாயகம் இந்தியாதான். ஆண்டு முழுவதும் விளையக் கூடியது. உலகம் முழுவதுமுள்ள வெப்பமண்டல பகுதிகளில் கத்தரிக்காய் விளைகிறது. பச்சை, வெள்ளை, அடர்நீலம் என பல நிறங்களிலும், முட்டைவடிவம், நீளவடிவம், உருண்டை வடிவம் என பல வடிவங்களிலும் கத்தரி விளைகிறது. கொழுப்பு சத்து குறைந்தது கத்தரிக்காய். மாச்சத்தும் இதில் குறைவு. 100 கிராம் கத்தரிக்காய் உடலுக்கு 24 கலோரிகள் ஆற்றல் தருகிறது. 9 சதவீதம் நார்ச்சத்து உள்ளது. இரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவை கட்டுப்படுத்துவதில் கத்தரிக் காய் அதிக பங்கெடுப்பதாக பிரேசில் நாட்டு பல்கலைக்கழகம் ஒன்று கண்டறிந்துள்ளது.

அடர்நீலம் அல்லது பழுப்பு நிற கத்தரிக்காயின் தோலில் ஆந்தோசயானின் எனப்படும் பிளேவனாய்டு உள்ளது. இது உடல் ஆரோக்கியத்தை அதிகப்படுத்தும் நோய் எதிர் பொருளாகும். புற்றுநோய், முதுமை நரம்பு வியாதிகள், உடல் எரிச்சல் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத்தன்மை வழங்கும்.

பி-காம்ப்ளக்ஸ் வகை வைட்டமின்களான பான்டோதெனிக் ஆசிட் (வைட்டமின் பி5), பைரிடாக்சின் (வைட்டமின் பி6), தயமின் (வைட்டமின் பி1), நியாசின் (வைட்டமின் பி3) ஆகியன அடங்கி உள்ளன. கொழுப்பு, புரதம் மற்றும் கார்போஹைட்ரேட் போன்ற ஊட்டச்சத்துக்களின் வளர்ச்சிதை மாற்றத்திற்கும், உடற்செயலியல் மாற்றங்களுக்கும் இந்த வைட்டமின்கள் அவசியமாகும். கத்தரிக்காயில் தாது உப்புக்களும் நிறைய உள்ளன. மாங்கனீசு, தாமிரம், இரும்பு, பொட்டாசியம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. மாங்கனீசு நோய் எதிர்பொருள்களின் துணைக் காரணியாக செயல்படும். பொட்டாசியம் அதிக ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தவும் பயன்படுகிறது. இரும்பு இரத்தத்தின் சிவப்புநிறத்தை அதிகரித்து, சுவாசத்தை இலகுவாக்குகிறது.

# மாதகல் மயில்வாகனப்புலவர்

மயில்வாகனப் புலவர், யாழ்ப்பாணம் பண்டைத்தரிப்புக் கோயிற்பற்றைச் சேர்ந்த மாதகற்கிராமத்திற் பிறந்தவர். இவருடைய தந்தையார் பெயர் சுப்பிரமணியம் எனவும், தாயார் பெயர் சிதம்பரம் எனவும் கூறுவர். கண்டியரசன் மீது கிள்ளைவிடு தூது பாடிய மாதகல் சிற்றம்பலப்புலவரின், சகோதரியார் புதல்வரே மயில்வாகனப் புலவர். இவர் இளமையிலே தம் மாமனாரிடம் கல்வி கற்று சிறந்த கல்வித்திறம் பெற்றவரானார். யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகளின் இறுதிக்காலப் பகுதியில் வாழ்ந்து வையாபாடல் எனும் யாழ்ப்பாணச் சரித்திரம் கூறும் நூலொன்றை எழுதிய வையா என்பவரது பரம்பரையைச் சேர்ந்தவர் இவர் என்று கூறப்படுகிறது.

மயில்வாகனப்புலவர் வாழ்க்கைக்காலம் தொடர்பாக குழப்பங்கள் வரலாற்று ஆய்வாளர்களிடம் தொடர்ந்து எழுந்திருந்த போதும், பல ஆய்வுகளின் பின் 18 ஆம் நூற்றாண்டின் பின்னரான காலமே இவர் காலம் என தற்போது உறுதியாக நம்பப்படுகிறது.

1658 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பகுதியை ஆண்டுவந்த போர்த்துக்கீசரிடமிருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்.அப்போதிலிருந்து கி.பி.1796 வரை - யாழ்ப்பாணம் 138 ஆண்டு காலம் ஒல்லாந்தர்வசம் இருந்தது. இந்தக் காலப்பகுதியில்தான் மயில்வாகனப்புலவர் யாழ்ப்பாண வைபவ மாலை என்ற நூலை எழுதியதாகக் கருதப்படுகிறது.

இந்நூல் யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கூறுவதற்கு எழுதப்பட்ட ஒரு நூலாகும். கி.பி.1736 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் இருந்த ஒல்லாந்த அதிகாரி ஒருவர் என நம்பப்படும் மேக்கறூண் என்பரின் வேண்டுகோளுக்கு இணங்கவே மயில்வாகனப் புலவர் இதனை எழுதினார் என்பதை இந்நூலில் உள்ள சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்றினால் அறிய முடிகிறது.

யாழ்ப்பாணம், வண்ணை வைத்தீஸ்வரசுவாமி கோயிலைக் கி.பி 1787 இல் கட்ட ஆரம்பித்து 1791 இல் திருப்பணியை முடித்து கும்பாபிடேகம் செய்வித்த வள்ளல் வண்ணை வைத்திலிங்கச் செட்டியாரும், மயில்வாகனப் புலவரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். இவ்விருவரும், இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த கூழங்கைத்தம்பிரானிடம் ஒன்றாக கல்வி கற்றனர். கூழங்கைத்தம்பிரான் ஒரு பாடத்தை ஒரே முறையன்றி இரண்டாம்முறை சொல்லிக்கொடுக்க மாட்டாரென்றும், வைத்திலிங்கச் செட்டியார் ஒரே முறையிற் பற்றிப்பிடிக்க வல்லவர் அல்லர் என்றும், மயில்வாகனப் புலவர் ஒரே முறையிற் பற்றிப்பிடிக்கத்தக்க சிறந்த நினைவாற்றல் உடையவரென்றும், அதனால் தம்பிரான் சொல்லிக் கொடுக்கும் பாடத்தை மயில்வாகனப்புலவர் ஒரேமுறையிற் உணர்ந்து வைத்திலிங்கச் செட்டியாருக்கு மீளச் சொல்லிக் கொடுப்பாரென்றும் வரலாற்றாசிரியர்கள் சிலர் கூறுவர். இதனால், மயில்வாகனப்புலவர் சிறந்த நினைவாற்றல் உடையவர் என்பது அறியப்படுகின்றது.

இவர் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலைக் கட்டுவித்த வைத்திலிங்கம் செட்டியாரின் நண்பராயிருந்தார் என்பதை வைத்தும், மயில்வாகனப்புலவரின் காலம் 18 ஆம் நூற்றாண்டின் பின்னரான காலமே என மேற்படி உறுதிப்படுத்தப்படுகிறது. இலங்கையில் தமிழ் மக்கள் பல நூற்றாண்டுகளாக நிலைபெற்று வாழ்ந்த வரலாறு, தமிழர்வரலாற்றில் ஒரு முக்கியப் பகுதியாகும்.

யாழ்ப்பாணத்தில் தமிழரசர்கள் பரம்பரை பரம்பரையாக ஆட்சிசெய்து வந்தனர். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன்பு அவர்கள் மேன்மை பெற்று வாழ்ந்தனர். யாழ்ப்பாண மன்னர்களின் வரலாற்றை ஆராய்ந்து அறிவதற்குத் துணை செய்யும் சான்று நூல்கள் கைலாய மாலை, வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை என்பனவாகும்.

இவற்றுள் யாழ்ப்பாண வைபவ மாலை விரிவானது: தெளிவான வசன நடையிலுள்ளது. தமிழில் வரலாற்று வடிவில் எழுதப்பட்ட நூல்கள் மிகச் சிலவே. இந்த வகையில் மயில்வாகனப் புலவர் எழுதிய 'யாழ்ப்பாண வைபவமாலை' தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு முக்கிய இடம் பெறுகிறது.

கைலாயமாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா மற்றும் இராசமுறை போன்ற நூல்களை முதல் நூல்களாகக் கொண்டே மயில்வாகனப்புலவர் யாழ்ப்பாண வைபவ மாலையை இயற்றினார் என்று தனது செய்யுளில் புலவர் எடுத்துக்கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கர வர்த்திகள் கால வரலாறு பற்றி கூடியளவு தகவல்களைக் கொண்டுள்ள தற்போது கிடைக்கக் கூடிய நூல் இதுவே ஆகும்.

மயில்வாகனப் புலவர் தனது யாழ்ப்பாண வைபவ மாலையிலேதான் முதன் முதலாக காக்கை வன்னியன் என்கின்ற கதாபாத்திரத் தினை உருவாக்குவதாக சொல்லப்படுகிது.

GAGO என்கின்ற போத்துக்கேயச் சொல்லுக்கு கொன்னையன் என்பது பொருள் என்றும் தமிழில் 'காகோ' என்றால் பிரமா படைக்காத படைப்பு, பெற்றோர் இடாத பெயர்.




மயில்வாகனப் புலவரின் காலத்தில் ஒல்லாந்தரால் புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாண போத்துக்கீசக் கோட்டை பின்னர் 1990 இல் உள்நாட்டுப் போரின் போது சிதைக்கப்பட்டது. சிதைந்த கோட்டையின் தோற்றம் இது.

ஆகவே, மயில்வாகனப் புலவர் அந்த 'காகோ' என்கிற பெயரை தமிழில் 'காக்கை' என விளங்கிகொண்டு, யாழ் சங்கிலியன் அரசவையில் மாப்பாண வன்னியர்கள் இடம்பெற்றதனால் காக்கையுடன் வன்னியனையும் இணைத்து காக்கை வன்னியன் என புதுபெயரைப் புனைந்தார் என்று பேராசிரியர் பூலோகசிங்கம், மருதநிலா இதழில் குறிப்பிடுகிறார்.

மயில்வாகனப் புலவரால் வசன நடையில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவமாலை 1884-ஆம் ஆண்டு முதன் முதலாக அச்சு வடிவில் வெளிவந்தது. அதன் பின்னர் 1916,1927-ஆம் ஆண்டுகளில் சில திருத்தங்கள், மாற்றங்களுடன் வெளிவந்தது. 1949-ஆம் ஆண்டு புலவர் குல.சபாநாதன் அவர்கள் இந்நூலைப் பதிப்பித்தார். இவரதுபதிப்பில் ஆராய்ச்சிக் குறிப்புகள் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சியாளர்களுக்கும், வரலாற்று மாணவர்களுக்கும் பயன்படக்கூடிய இந்நூலின் பிரதிகள் இன்று கிடைப்பதற்கு அரிதாய் உள்ளன.

யாழ்ப்பாணத்தின் சிறப்பினையும் மன்னர்களின் வரலாற்றையும் கூறும் இந்நூலில் வரலாற்று அம்சங்களுடன் கர்ண பரம்பரையான கதைகளும் இணைத்து எழுதப்பட்டுள்ளன என சொல்லப்படுகிறது.

இந்நூல் ஆரம்பத்தில் இராமாயணத்தில் இருந்து விபீடணன் ஆட்சியைத் தொட்டு, பின் மகாவம்சத்தில் இருந்து -வட இந்தியாவில் இருந்து வந்த விஜயனின் கதையையும் அவன் பின் அரியணையேறிய அவன் தம்பியின் மகனாகிய பண்டுவாசனதும் கதையை கூறி, அதன் பின் அவன் வம்சத்தில் வந்த ஒருவனிடமிருந்து தென்னிந்தியப் பாணன் ஒருவன் பரிசாகப் பெற்ற மணற்றிடர் என்ற இடம் யாழ்ப்பாணமான கதை கூறி யாழ்ப்பாணத்தின் வரலாற்றைத் தொடங்குகின்றது.

இலங்கையின் மேற்குக் கரையில் உள்ள திருக்கேதீச்சரத்தின் மீளமைப்பு, கிழக்குக் கரையில் உள்ள திருக்கோணேச்சரம், தெற்கில் உள்ள சந்திரசேகரீச்சரம் மற்றும் வட கரையில் உள்ள திருத்தம்பலேசுவரம் என்பவற்றை விஜயராஜனின் திருப்பணிகளாக இந்நூல் கூறுகிறது. அத்தோடு யாழ்பாடியின் வரவுக்கு முன்னரே வன்னியர்களின் குடியேற்றம் பற்றியும் பேசப்படுகிறது.

யாழ்பாடிக்குப் பின் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட குழப்ப நிலையைத் தொடர்ந்து தென்னிந்தியாவில் இருந்து கூழங்கைச் சக்கரவர்த்தி அழைத்துவரப்பட்டமை, நல்லூர் இராசதானியின் தோற்றம், யாழ்ப்பாணத்தில் மக்களின் குடியேற்றம் என்பவற்றை விபரிக்கும் இந்நூல் தொடர்ந்து இந்நாட்டை ஆண்ட மன்னர்கள் பற்றியும் அவர்கள் காலத்தில் நடந்த முக்கிய சில சம்பவங்கள் பற்றியும் சுருக்கமாக சொல்கிறது.

போர்த்துக்கீசரிடம் யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைய முன் நடந்த சம்பவங்கச் சொல்வதிலும், காலப்பகுதிகளைக் குறிப்பிடுவதிலும் குழப்பங்கள் இருந்தபோதும் போர்த்துக்கீசர் ஆட்சி பற்றியும் பின்னர் அவர்களின் வீழ்ச்சி பற்றியும் கூறும் இந்நூல் ஒல்லாந்தரின் ஆட்சிபற்றியும் ஓரளவு கூறி நிறைவு பெறுகிறது.

யாழ்ப்பாண வைபவ மாலை மட்டுமல்லாமல் புலியூர் யமக அந்தாதி, ஞானாலங்கார ரூப நாடகம், காசியாத்திரை விளக்கம் என்ற நூல்களும் மயில்வாகனப்புலவரால் எழுதப்பட்டதாக சொல்லப்படுகின்றது. ஆனால், புலியூர்யமகஅந்தாதி தவிர்ந்த ஏனைய இரண்டு நூல்களும் வெளிவரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



கோட்டையில் அமைந்திருந்த கலங்கரை விளக்கம்

புலியூரென்பது சிதம்பரத்துக்கு வேறொரு பெயர். புலியூர் யமக அந்தாதி மயில்வாகனப் புலவரின் செய்யுள் யாக்குந் திறனை நன்கு புலப்படுத்துகின்றது. இதற்கு ம.கதிரவேற்பிள்ளையவர்கள் சிறந்ததோர் உரை எழுதி வெளியிட்டிருக்கின்றார்கள். ஞானாலங்காரரூப நாடகம் ஆன்ம தத்துவங்களை உருவக அலங்காரம் செய்து பாடிய நாடக நூல். இது அச்சிடப்படவில்லை. காசியாத்திரை விளக்கம் புலவர் காசிக்குச் சென்று திரும்பிய பின்னர் எழுதியது.


இதன் ஏட்டுப் பிரதியொன்று செல்லரித்து வாசிக்க முடியாத நிலைமையில் முதலியார் இராசநாயகம் அவர்களிடம் இருந்ததாக சொல்லப்படுகின்றது.

ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் எழுந்த இலக்கியங்களுள் மயில்வாகனப்புலவரின் 'யாழ்ப்பாண வைபவமாலை' தமிழர் வரலாற்றை ஆய்வு செய்ய விரும்பும் ஆய்வாளர்களுக்கு பல வகையில் உதவும் என்பதை அறிய முடிகிறது. ஆனாலும், மயில்வாகனப் புலவர் தாம் கேள்விப்பட்டவற்றையும் கர்ண பரம்பரையினையும் ஆதாரமாகக் கொண்டு கூற்றுகள் பலவற்றைப் புகுத்தி விட்டார் என்றும், இவர் சிறந்த புலவர் என்றாலும், வரலாற்றாசிரியர் அல்ல எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

இந்நூலிற் காணப்படும் வரலாற்று முரண்பாடுகளை யெல்லாம் வணக்கத்துக்குரிய சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் "The Ceylon Antiquary and Literary Register (Volume VI Part III) இல் , Sources of the Yalpana Vaipava Malai' எனும் கட்டுரையில் எழுதியுள்ளார் மேலும், அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய 'Kings of Jaffna' எனும் நூலிலும், 'யாழ்ப்பாண வைபவ விமரிசனம்' எனும் நூலிலும் இது தொடர்பாக விரிவாக எழுதியுள்ளார். எனினும் இவை யாவற்றுக்கப்பாலும் மயில்வாகனப் புலவரது புலமையும் பணியும் என்றும் போற்றுதற்குரியதே.

-தங்கமணி

# மொழிபெயர்ப்புக் கவிதைகள்



பலஸ்தினிய தேசத்தவரின் கவிதைகள்

## ஒரு யூத நண்பனுக்கு

சாத்தியமற்றதை
என்னிடம் கேளாதே

நட்சத்திரங்களைக் கொண்டுவரும்படி
சூரியனிடம் நடந்து செல்லும்படி
என்னிடம் கேளாதே
கடலை வற்ற வைக்கும்படி
பகலொளியை துடைத்து விடும்படி
என்னைக் கேளாதே

எனது கண்களை,
எனது காதலை,
எனது இளமை நினைவுகளை
அழித்து விடும்படி என்னைக் கேளாதே
நான் ஒரு வெறும் மனிதன்.

ஓர் ஒலிவ் மரத்தின் கீழ்
நான் வளர்ந்தேன்
எனது தோட்டத்துக் கனிகளை
நான் புசித்தேன்
திராட்சை வனங்களில்
வைனை நான் குடித்தேன்
பள்ளத்தாக்குகளில்
கள்ளிப் பழங்களை
அதிகம் அதிகம் நான் ருசிபார்த்தேன்.

எனது செவிகளில்
வானம்பாடிகள் பாடல் இசைத்தன
நகரங்களிலும் வயல் வெளிகளிலும்
வீசிச் சென்ற சுதந்திரக்காற்று
எப்போதும் என்னைச் சிலிர்ப்படைவித்தது.

எனது நண்பனே
எனது சொந்த நாட்டினை விட்டுப்
போகுமாறு
நீ என்னைக் கேட்க முடியாது.

\- அஸ்மார்

## நம்பிக்கை

உனது பாத்திரத்தில்
இன்னமும் சிறிது தேன் எஞ்சியுள்ளது
ஈக்களைத் துரத்து
தேனைப் பேணு

இன்னமும் கூட
உனது வீட்டுக்கோர் கதவுண்டு
இன்னமும்கூட
உனது வீட்டில் ஓர் பாயுண்டு
கதவை மூடு
குளிர் காதற்றில் இருந்தும் உன்
குழந்தையைப் பேணு
மிகமிக மோசம் இக்குளிர் காற்று

குழந்தைகள் நன்கு தூங்குதல் வேண்டும்
நெருப்பெரிக்க சிறிது விறகு
கொஞ்சம் கோப்பி
நெருப்புச் சுவாலை
இன்னமும் கூட உன்னிடம் உண்டு

\-தர்வீஷ்

# தாயவள் மனதோடு..!



## சிறுகதை கதாசிரியர்-பூமணி

**முன்** தாழ்வாரத்தின் திண்ணையில் இருந்தவாறு அன்றைய புதினத்தாளை வாசித்துக் கொண்டிருந்தார் சுந்தரம். அவர் காலையிலேயே கடைக்கு சென்று புதினத்தாள் வாங்கிவந்து படித்து முடித்துவிட்டுத்தான் தோட்டவேலைகளை தொடங்குவார். காலையிலேயே அதனைப் படிக்காவிட்டால் அவருக்கு தலையே வெடித்துவிடும் போலிருக்கும். அவர் புதினத்தாள் படித்து முடித்து எழவும் மகள் கலா வீட்டுக்குள் வரவும் சரியாக இருந்தது. 'என்னம்மா இன்றைக்கு தாமதமாகிவிட்டது. ஏதாவது பிரச்சினையோ?' என சுந்தரம் கேட்டார். 'இல்லையப்பா. இவரையும், பிள்ளைகளையும் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி விட்டு வர தாமதமாகிவிட்டது.' அம்மாவுக்கு மருந்து கொடுக்க நேரமாகிவிட்டது அப்பா' என பதட்டமாக சொல்லியபடி உள்ளே மருந்துக்குளிசைகளை எடுக்கப் போனாள். 'அதுக்கென்ன பிள்ளை. நீ அவசரப்படாமல் உள்ளுக்கு போய் அம்மாவின்ரை வேலையைப் பார். நான் குளிசை கொடுத்தால் தான் அவள் சாப்பிடமாட்டாளே. நீ பொறுமையாய் கொடுப்பாய். அவளுக்கும் அது பழகிவிட்டது. நான் இனி தோட்டத்துக்கு போறன்' என்ற படி வீட்டின் பின்புறமாக உள்ள தோட்டத்துக்கு தண்ணி இறைக்க சுந்தரம் போனார்.

உள்ளே போன கலா தாயோடு போராடி காலை மருந்துக்குளிசையை கொடுத்துவிட்டு, காலைச்சாப்பாட்டை எடுத்து வர அடுக்களைக்குள் போனாள். காலைச்சாப்பாடு சுந்தரம் செய்து வைத்தவிடுவார். ' கலா மருந்து கொடுப்பதும், தாயார் சுமதி அதனைகுடிக்க மறுப்பதும்,கலா கெஞ்சி மன்றாடி அதனை கொடுப்பதும் ஒவ்வொரு நாளும் நடக்கும். ஓடியாடி சுறுசுறுப்பாக இருந்த தன் மனைவி சுமதி இப்படி இருக்கிறாளே என்று நினைத்து சுந்தரம் கவலைப்படுவதும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதனால் அவரும் தளர்ந்து கொண்டே போகிறார். அம்மாவையும்,அப்பாவின் நிலைமையையும் எண்ணி கவலைப் படும் கலாவுக்கு தனது தம்பி பிரபுவின் மீது கோபம் கோபமாக வரும்.

வெளிநாட்டில் வாழும் அவனுக்கு தனது பெற்றோரைப்பற்றி ஒரு துளி கவலையும் இல்லையே என்று நினைத்து மனதுக்குள் நாளும் குமுறுவாள் கலா. தாய்க்கு முன்பாக தம்பியை பற்றி எதுவும் பேசமாட்டாள். மகனின் மீது உயிரையே வைத்திருக் கும் அம்மாவை மனம் நோகவைக்கக் கூடாது என்பதால் தம்பியை அம்மா வுக்கு முன்னால் ஏசமாட்டாள். சுந்தரம் ஓய்வு பெற்ற ஆசிரியர். ஆனாலும் வீட்டில் அவருக்கு ஓய்வு குறைவுதான். தோட்ட வேலை, வெளிவேலை என ஏதோ ஒரு வேலை அவருக்கு இருந்துகொண்டே இருக்கும். வீட்டோடு சேர்ந்த காணியில்தான் அவர்களின் தோட்டம் இருந்தது. சுமதி வீட்டுவேலையோடு தையல் வேலையும் செய்துவந்தாள். ஊரில் பெரும்பாலானோர் அவளிடம் தான் தமது உடைகளை தைக்க கொண்டு வருவார்கள்.அவளின் நேர்த்தியான தையலுக்காக அவளிடம் தைக்க கொடுப்பதையே அவர்கள் விரும்பினார்கள்.ஆனால் இப்போது அவளுக்கு முடியவில்லை.

அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தமகள் கலா. இளையவன் பிரபு. கலாவின் மூத்த மகள் அருவி 10ஆம் வகுப்பிலும், மகன் சயந்தன் 6ஆம் வகுப்பிலும் படிக்கிறார்கள். அவர்கள் படிக்கும் பள்ளிக்கூடம் வீட்டுக்கு அருகாமையில்தான் இருக்கிறது. அவளின் கணவன் தில்லை, தனது பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடத்தில்தான் ஆசிரியராக பணியாற்றுகிறான்.மகன் பிரபு லண்டனில் குடும்பத்தோடு வாழ்கிறான். அவனின் மூத்த மகன் றியோவுக்கு எட்டு வயது. மகள் தியாவுக்கு ஆறு வயது. அவர்களோடு பேசுவதற்கு சுமதிக்கும் சுந்தரத்துக்கும் நிறையவே ஆசை இருக்கிறது. ஆனாலும் ஒருநாளும் அவர்களோடு பேசவில்லை. அவர்களுக்கு தமிழ் பேசத்தெரியாது. அதனால் அவர்கள் குரல்கள் கூட இவர்களுக்கு தெரியாது.கலாவும் பிள்ளைகளும் கூட அவர்களுடன்பேச ஆசைப்பட்டு ஏமாற்றம் அடைந்த நாட்களே அதிகம் எனச் சொல்லலாம்.

கலா தனக்கு தந்த சீதன வீட்டில்தான் தன் குடும்பத்தோடு வசிக்கிறாள்.கலாவின் வீடு இவர்களின் வீட்டிலிருந்து பத்து வீடுகள் தள்ளி உள்ளது. காலையில் கணவன், பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு சென்ற பின் பெற்றோரிடம் வரும் கலா, அங்கு செய்யவேண்டிய

வேலைகளை செய்வாள். இடையில் தனது வீட்டுக்கு போய் சமையலை முடித்துவிட்டு மீண்டும் இங்கே வருவாள். பின்னர் பெற்றோருக்கான இரவுச்சமையலை செய்து வைத்துவிட்டு தன் வீட்டுக்கு செல்வாள். சுமதி நோயாளியாக ஆனதிலிருந்து கலாவின் அன்றாட வேலைகள் இவ்வாறுதான் தொடர்கின்றன. நல்ல உடல்நலத்துடன் சுறுசுறுப்பாக செயற்பட்ட சுமதி இப்போது எல்லா நோய்களுடன் போராடுகிறாள்.

சுந்தரமும்,சுமதியும் தம்மை வருத்தி உழைத்த பணத்தைக் கொண்டுதான் மகன் பிரபுவை வெளிநாடு அனுப்பினார்கள். மகனும் ஆரம்பத்தில் அடிக்கடி தொலைபேசி எடுப்பான். இடையில் ஒரு தடவைதான் ஊருக்குவந்தான். அதுவும் அவனது திருமணத்திற் காகத்தான். அவனுக்காக பல பெண்களை பார்த்து அவர்களில் அவனுக்கு பொருத்தமானவர்கள் என சிலரை தெரிவுசெய்து. அவர்களின் புகைப்படங்களை பிரபுவுக்கு அனுப்பினார்கள். அதில் வருணி என்ற பெண்ணை அவனுக்கு பிடித்தது. பெற்றோரிடம் தனது விருப்பத்தை சொல்ல. அவர்களும் வருணி வீட்டுக்கு போய் கலந்து பேசி திருமணத்துக்கான ஒழுங்குகளை செய்தார்கள். தனது திருமணத்துக்காக வந்த பின் அவன் இன்றளவும் நாட்டுக்கு வரவில்லை. திருமணத்தின் பின் அவன் லண்டன் சென்று மனைவியை அழைப்பதற்கான வேலைகளை செய்தான். சில மாதங்களில் வருணியும் லண்டன் சென்றுவிட்டாள். அவளும் போன புதிதில் அடிக்கடி தொலைபேசி எடுப்பாள். பின்னர் அது வாரங்களுக்கொரு தடவை. மாதங்களுக் கொரு தடவை எனத் தேய்ந்து. இறுதியில் ஆண்டுக்கு ஒன்று என ஆகி இறுதியில் நின்றே போனது.

பிரபுவும் எப்போதாவது அழைப்பு எடுப்பான். அவனின் தொலைபேசி அழைப்புக்காக ஏங்கத் தொடங்கினாள் சுமதி. இடையில் அவர்களுக்கு மகன் பிறந்தபோது அதனை தெரிவிக்க தொலைபேசி எடுத்தான்.பேரப்பிள்ளையை பார்க்க வேண்டும் என சுமதி தன் விருப்பத்தை தெரி வித்ததால். ஒரு நாள் 'ஸ்கைப்'பில் காட்டினார்கள். அப்போது மகனையும். மருமகளையும். பேரப்பிள்ளையையும் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தாள் சுமதி. பின்னர் தொலைபேசி தொடர்பாடல் குறைந்து கொண்டே வந்தது.மகள் பிறந்த நேரம் மீண்டும் தொலைபேசி அழைப்பு எடுத்து சொன்ன பிரபுவிடம் 'ஸ்கைப்'பில் எல்லோரையும் பார்க்க ஆசையாக இருப்பதாக சுமதியும் சுந்தரமும் கேட்டார்கள்.அதற்கான ஒரு நேரத்தை அவன் சொன்னபோது. கலாவும் தனது குடும்பத்துடன் அங்கு வந்து நின்றாள். அந்த நேரம் வந்தது. எல்லோரும் பிரபுவுடனும். வருணியுடனும் நன்றாக ஆசைதீர பேசினார்கள். பேரப்பிள்ளைகள் இருவரையும் பார்த்ததில் சுந்தரத்துக்கும். சுமதிக்கும் நல்ல மகிழ்ச்சி. பேரனின் மழலைக் குரல் அவர்களை ஆனந்தம் அடைய வைத்தது.அந்த ஒருநாள் தான். அதன் பின்னர் தொலைபேசி தொடர்பாடல் மெல்ல மெல்ல குறைந்து இப்போது இல்லாமலே போய்விட்டது. அவர்கள் எடுக்காமல் விட்டாலும் இவர்கள் பல தடவைகள் முயன்று பார்த்தார்கள். ஆனால் முடியவில்லை.

இதனை சுமதியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எப்போதும் மகனையும்.பேரப்பிள்ளைகளையும் நினைத்து நினைத்து ஏங்கத் தொடங்கினாள்.மகன் குழந்தையாக இருந்த போது எடுத்த படத்திலிருந்து அவன் வளர்ந்த பின் எடுத்த புகைப்படங்கள் எல்லாவற்றையும் போட்டு வைத்துள்ள புகைப்படச் செருகேட்டை (அல்பத்தை) எடுத்து வைத்து ஒவ்வொருநாளும் அதனை புரட்டி புரட்டி பார்த்துக் கொண்டே இருப்பாள்...

நாளாக நாளாக ஏக்கம் அதிகரிக்க அவள் உடலும் மனமும் தளரத் தொடங்கின. தையல் வேலை மெல்ல மெல்ல குறைந்தது. ஒரு உடுப்பு தைக்க கொடுத்தால் அதனை தைத்து கொடுக்க நீண்டநாள் ஆகும். அதனால் உடுப்பு தைக்க கொடுப்பவர்களின் வருகை குறைந்து இறுதியில் நின்றே போனது. சமைத்து கொண்டிருப்பாள். திடீரென இடையில் சமையலை மறந்துவிட்டு. வெளியே வந்து முற்றத்தில் நின்று எதனையோ வெறித்து பார்த்துக் கொண்டு நிற்பாள். பின்பு யாருடனோ கதைத்துக் கொண்டிருப்பாள். பார்த்தால் அங்கே யாரும் இருக்க மாட்டார்கள். யாருடன் கதைக்கிறாள் என்று அவளிடம் வினவினால். மகன் பிரபு வாசலில் நின்று விளையாடு கின்றானாம் அவனோடு கதைத்கிறாளாம். இது அயல வருக்குத் தெரிந்த உண்மை.

ஒரு நாள் தோட்டத்திலிருந்து களைத்து வந்த சுந்தரம் வாசலில் மனைவி நிற்பதைப் பார்த்து. "அதற்கிடையில் சமைச்சிட்டியா" என கேட்டார்... அவள் எதுவும் பேசாமல் நின்றாள் "என்னப்பா? நான் கதைக்கிறது கேட்குதா இல்லையா" என இரண்டு தடவை உரத்துக் கேட்ட பின்தான் அவள் சாதாரண நிலைக்கு வந்தாள். "என்னை கூப்பிட்டனீங்களோ" என கேட்டாள். அவளை வியப்போடு பார்த்தார் சுந்தரம். "சமைச்சிட்டியா?" எனக் கேட்டவுடன் தான் "இல்லை.. இல்லை. செய்துகொண்டுதான் இருக்கிறன். எல்லாவேலையையும் ஒராளாக எப்படிக்வனிக்கிறது. கொஞ்சம் பொறுங்கோ" என்று விட்டு அடுப்படிக்குள் விரைந்தாள். சமையலைத் தவிர சுமதிக்கு வேறென்ன வேலை... குழம்பினார் சுந்தரம்.

இந்த செயற்பாடு தொடர்ந்து நடக்கத் தொடங்கியது. அதன் பின்தான் சுந்தரத்துக்கு அவளின் நிலைமை புரியத்தொடங்கியது. பின்னர் மருத்துவரிடம் அவளை அழைத்து சென்றபோதுதான் மனவருத்தம்தான் அவளை பாதிக்கின்றது என மருத்துவர் சொன்னார். நாளாக ஆக அவளின் மன ஏக்கம் அதிகரித்துக்கொண்டே வந்தது. அதுவே அவளை ஒரு நோயாளியாக ஆக்கிவிட்டது.
அதன் பின்தான் கலா அங்கு வந்து வீட்டு வேலைகளை செய்ய தொடங்கினாள்.

பார்த்து பார்த்து பக்குவமாக காத்து வளர்த்த மகனை இப்போது பார்க்க முடியவில்லையே என்ற தவிப்பு அவளை வாட்டி வதைக்கிறது. அவளின் நிலமை அவளின் கணவனுக்கும் புரிகிறது. மகளுக்கும் தெரிகிறது. ஆனால் அவர்களால் என்ன செய்ய முடியும்.? "தம்பி வாற நேரம் வருவான்" என்று சுந்தரம் சொன்னால். "அவனின்ரை குரலையாவது கேட்க வேணும்போல இருக்கு. பேரப் பிள்ளையளோடை கதைக்க ஆசையாயிருக்கு" என்று சுயநினைவில் இருக்கும் சமயம் சுமதி ஏக்கத்துடன் சொல்லும் போது சுந்தரத்தால் எதுவுமே பேசமுடிவதில்லை. அவள் பிரபுவை எப்படி பார்த்து வளர்த்தாள் என்பது சுந்தரத்துக்கு தெரியும்.அவனுக்கு சாதாரண காய்ச்சல் வந்தாலே துடித்து போய்விடுவாள். உடனேயே மருத்து வரிடம் போக வேண்டும் என்பாள். "இது சாதாரண காய்ச்சலப்பா. இதுக்கு ஏன் மருத்துவரிடம் போக வேணும். குடிநீர் காய்ச்சி கொடுத்தால் ஒரு நாளிலேயே பறந்துவிடும்" என அவர் சொன்னால் அவளுக்கு கோபம் வந்துவிடும்.

"என்ரை பிள்ளை இப்பிடி காய்ச்சலிலை துவண்டு கிடக்கிறதை என்னாலை பார்க்கேலாது. "இப்படி சொல்லும்போதே அவள் கண்கலங்கிவிடும். "சரி சரி வா மருத்துவரிடம் போவோம்" என்று அவளையும் மகனையும் கூட்டிச் செல்வார் சுந்தரம். வளர்ந்து பெரியவனான பின்பும் அவனை தனது கண்ணுக்குள் பொத்திப் பாதுகாத்து வளர்த்தாள். அவனின் முகம் வாடினாலே பிள்ளைக்கு என்னவோ பிரச்சனை என்று கண்டுபிடித்துவிடுவாள். அவனும் எதுவென்றாலும் ஓடிவந்து தாயிடம்தான் சொல்வான். தூர எந்த இடத்துக்கும் அவனும் போக விரும்புவதில்லை. அவளும் அவனை விட்டு ஒருநாள் கூட பிரிந்திருக்க தயாராயிருந்ததில்லை. அப்படிப்பட்ட பிள்ளையை இப்படிப் பிரிந்திருப்பது சிரமம் தான். ஆனால், அதுதான் இயற்கை என்பதால் அதனை அவள் ஏற்றுக் கொண்டாள். ஆனால், அவனோடு தொலைபேசியில் கூட பேச முடியாமல் போனபோது அவளால் அதனை தாங்கிக் கொள்ள முடியவில்லை. அம்மாதான் எல்லாமாக வாழ்ந்த பிள்ளையால் எப்படி இவ்வாறு இருக்க முடிகிறது என சுந்தரம் எண்ணி எண்ணி பார்க்கிறார். எதுவுமே அவருக்கு புரியில்லை. தன்னை பிரிந்திருக்கவே முடியாத தன் தாயைப் பற்றி தெரிந்துள்ள பிள்ளை ஆறுதலாக இடையிடையே தொலைபேசியில் தாயாருடன் பேசலாமே என நினைப்பார். 'பெற்றவர்களின் பாசத்தை புரிந்துகொள்ள முடியாத பிள்ளைகளால் எப்படி மனச்சாட்சி உறுத்தாமல் வாழ முடிகிறது?' என சுந்தரத்தின் மனதுக்குள் அடிக்கடி இந்த கேள்வி எழுந்து எழுந்து வாட்டுகிறது.

மிகவும் சிரமமான வாழ்க்கை வாழ்ந்தாலும், மகனிடமிருந்து பணத்தை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அதனால் அப்படி பணம் கேட்பார்கள் என்பதால் தொலைபேசி எடுக்காமல் தவிர்க்கிறான் என சொல்ல முடியாது. அப்படியானால் ஏன் இப்படி கல் மனத்தினனாக தம் மகன் இருக்கிறான் என அவருக்கு புரியவேயில்லை. உடல்நலம் நன்றாக இருந்தபோது சுமதியும் கடுமையாக உழைத்தாள். தங்கள் நிலத்தில் இருவருமே கடினமாக உழைத்தார்கள். மகனை வெளிநாடு அனுப்ப பணம் போதாது என்று காணியில் சிறுபகுதியை விற்றும் பணம் பெற்றார்கள். இப்போது உள்ள சிறு காணியில் தொடர்ந்தும் உழைக்கின்றனர். ஆனால் இப்போது சுமதி நோயாளியாகி விட்டதால் அவளால் கணவனுக்கு தோட்ட வேலையில் உதவி செய்யமுடிய வில்லை. தையல் வேலையும் இல்லை. வீட்டுத்தேவைகளுடன் தனது மருந்துச்செலவுகளுக்கும் சேர்த்து கணவன் கடுமையாக உழைப்பதைப் பார்த்து கவலைப்பட மட்டுமே அவளால் முடிகிறது. லண்டனில் மகன் வசதியாக வாழ்கின்றான் என பலர் சொல்ல கேட்டிருக்கிறார்கள். அதனைக் கேட்டு அவள் மகிழ்ச்சியடைந்தாள். ஆனால் மகனுடன் தன்னால் கதைக்க முடியவில்லையே என்ற தவிப்பு அவளை உடல்ரீதியாகவும் உருக்குலைய வைத்துவிட்டது. இப்போது அவளைப் பார்க்கும் எவராலும் அவளை உடனே இனங்காண முடியாது. அவ்வளவுக்கு அவள் மாறிவிட்டாள்... பிரபுவின் மகளின் பூப்புனிதநீராட்டு விழா. அவனின் மகனின் பிறந்தநாள் விழா என லண்டனில் மிகவும் ஆடம்பரமாக அவனால் நடத்தப்பட்ட விழாக்கள் பற்றி ஊருக்கு வந்த உறவினர் சிலர் விபரித்த விதத்திலிருந்தே மகனின் குடும்பம் எப்படி வாழ்கிறது என்பதை சுந்தரம் தெரிந்து கொண்டார். அதனை சுமதியிடம் சொன்னால் மகிழ்ச்சியடைவாள் என்றாலும், இவ்வளவு செய்யும் தனது மகனுக்கு தம்மோடு கதைக்க நேரம் கிடைக்கவில்லையா என யோசித்து தன்னை இன்னும் அவள் மனரீதியாக வருத்துவாள் என நினைத்து அவளிடம் அதனை சொல்லவில்லை. தன் மனைவியை முன்னர்போல் உடல்நலம் நன்றாக உள்ளவளாக, சுறுசுறுப்பானவளாக பார்க்க வேண்டும் என்பதுதான் அவரின் இன்றைய எதிர்பார்ப்பு. அவருக்கும் மகனின் செயல்கள் மன வேதனையை அதிகமாகவே ஏற்படுத்துவது உண்மை தான். ஆனாலும் உலகம் போகும் போக்கில் இப்படித்தான் குடும்ப உறவுகள் நிலைமை அமையும் என்ற உண்மை நிலையை புரிந்து அதனை கடக்க அவர் முயல்கின்றார். ஆனால் சுமதி அப்படி இல்லை. அவளுக்கு பிள்ளைகளில் அன்பு செலுத்த மட்டுமேதெரியும். கலா பக்கத்தில் இருப்பதால் அவளையிட்டு அவள் கவலைப்படவில்லை. ஆனால் நீண்ட காலமாக மகனை பார்க்காதது அவளை இந்த நிலைக்கு தள்ளிவிட்டது. எப்போதும் மகனின் தொலைபேசி அழைப்பின் ஒலிக்காக அவள் காத்திருப்பதால் எந்த ஒலியும் தொலைபேசி அழைப்பு மணியாகவே அவளுக்கு கேட்கும். சிறு மணிச்சத்தம் கேட்டாலும் 'பிள்ளை கலா போன் அடிக்குது. ஒருக்கால் ஓடிவந்து எடுத்துத்தா என ' பதட்டத்துடன் அழைப்பாள். கைத்தொலைபேசி பக்கத்தில் தான் இருக்கும். ஆனால் தான் எடுப்பதற்கிடையில் நின்றுவிடுமோ என்ற பயம் அவளுக்கு இருந்தது. தான் ஒன்றுமே செய்ய இயலாதவள் என்ற மனநிலை அவளுக்குள் வளர்ந்து விட்டதால் வந்த பயம்தான் இது. அதனால் தான் மகளை அழைப்பாள். 'அம்மா அது வெளியிலை போற சைக்கிள் சத்தம். தொலைபேசி சத்தம் வேற மாதிரி' என கலா சொல்லி சாந்தப்படுத்துவாள். தாயின் நிலையை பார்க்க சகிக்காமல் அவள் எத்தனையோ தடவை தம்பியுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றிருக்கிறாள். ஆனால் ஒருபோதும் அவளால் பேச முடிந்ததில்லை. சிலவேளை அவனின் பிள்ளைகள் தொலைபேசி எடுப்பார்கள். கலா 'பிரபு நிற்கிறானா' என்று கேட்கும் முன்பே, ' sorry we don't know you. mum and dad are not at home now. Call later. Sorry" என பட்டென தொலைபேசியை வைத்துவிடுவார்கள். கலா தன்னை யாரென்று சொல்லும் முன்பே அவர்கள் தொலைபேசியை வைத்துவிடுவதால் அவளால் எதுவுமே செய்ய முடிவதில்லை.

ஒருநாள் திடீரென தொலைபேசி மணி அடித்தது. சுந்தரம் எடுத்தார். மறுமுனையிலிருந்து மகன் பிரபு. 'பிரபுவா கதைக்கிறாய்' என அவர் ஆவலுடன் கேட்க 'பிள்ளை கதைக்கிறானா? என்னிடம் போனை தாங்கோ' என துடிப்புடன் அவசரமாக தொலைபேசியை சுமதி கேட்டாள். 'தம்பி அம்மாவிட்டை கொடுக்கிறன். கதை அப்பன் 'என சுந்தரம் சொல்ல 'இல்லையப்பா. உங்களிடம் ஒரு விடயம் சொல்ல எடுத்தனான்' என்றான். 'சரி. சொல்லு' என அவர் சொல்ல, 'அடுத்த கிழமை நாங்கள் ஊருக்கு வருகிறோம்.' என்றான். உள்ளத்தில் மகிழ்ச்சி கூத்தாட "அப்பிடியா தம்பி. எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கு. உன்ரை அம்மாவின்ரை வருத்த மெல்லாம் இனி பறந்து போயிடும். பேரப்பிள்ளையளுக்கு வசதிப்படுற மாதிரி வீட்டை ஒழுங்குபடுத்துறன். எல்லாவற்றை மாற்றி வடிவாக்கிறன்' என்று சுந்தரம் அடுக்கிக்கொண்டே போக 'இல்லை அப்பா. நாங்கள் அது எல்லாம் ஒழுங்குபடுத்திட்டம். நீங்கள் அதுக்காகவெல்லாம் சிரமப்படவேண்டாம், உங்கடை

வீட்டிலிருந்து கொஞ்சம் தூரமாகத்தான் ஒரு இடத்திலை நாங்கள் தங்கப்போகிறம். அங்கிருந்து உங்களை பார்க்க வருவம்.நீங்கள் எந்த ஒழுங்கும் செய்யவேண்டாம்.' என அவசரஅவசரமாக படபடவென்று சொல்லி முடித்தான் பிரபு. ஏன் தம்பி இங்கை வந்து எல்லாரும் தங்கலாம்தானே. எங்களுக்கும் பேரப்பிள்ளையளோடு கதைச்சு பேச விருப்பமாயிருக்குது. அம்மாவுக்கும் நீங்கள் எல்லாரும் தன்ரை பக்கத்திலை இருக்கிறீங்கள் எண்ட மகிழ்ச்சியிலை வருத்தம் எல்லாம் மாறிவிடுமல்லவா" என்று பக்குவமாக சொல்ல முயன்று கொண்டிருந்தார் சுந்தரம். "அப்பா! அதெல்லாம் சரிவராது. உங்கடை வீடு என்ரை பிள்ளையளுக்கு வசதியானதாயிருக்காது.வருணியின்ரை வீடும் சரிவராது. என்ரை நண்பன் ஒருவன் அங்கை நல்ல வசதியோடை வீடு கட்டி வைச்சிருக்கிறான். அங்கைதான் வந்து தங்கப்போறம்." என்று அவசரமாக சொல்லி முடித்து தொலைபேசியை வைக்கப் போனபோது "தம்பி ஒருக்கால் அம்மாவோடு கதைச்சுட்டு வையடா" என்று சுந்தரம் சொன்னார். "அப்பா நான் வெளியிலை போகப்போறன். அங்கை வந்து கதைக்கிறன்"என்று சொல்லிவிட்டு இணைப்பை துண்டித் தான் பிரபு.

'நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? அம்மா எப்படி இருக்கிறா? அக்கா எல்லோரும் எப்படி இருக்கிறார்கள்?" என எதுவுமே அவன் கேட்கவில்லையே என்று தனது உள்ளம் எழுப்பும் கேள்விகளை மனதுக்குள் புதைத்துக்கொண்டு, தொலைபேசியில் மகனுடன் தான் பேசுவதையே ஏக்கத் துடன் பார்த்துக்கொண்டிருந்த சுமதிக்கு அருகில் வந்த சுந்தரம் "தம்பி அவசரமாய் எடுத்தவன். வெளியிலை போகப்போறானாம். ஒரு நல்ல சேதி சொல்லத்தான் எடுத்தவன். அடுத்த கிழமை வாறானாம். வந்து உன் னோடை ஆறுதலாய் கதைக்கிறன் எண்டு சொன்னவன்" என்று அவளுக்கு மனதுக்கு ஆறுதலாக இருக்கும் விதத்தில் விளங்கப்படுத்தினார். மகன் சொன்ன எல்லாவற்றையும் சொன்னால் அவள் உடைந்தே போய்விடுவாள் என்று அவருக்கு தெரியும். மகன் தன்னோடு கதைக்கவில்லையே என்ற கவலை அவளை வாட்டினாலும் நேரே மகனைப் பார்க்கப்போகிறோம் என்ற நினைப்பு சுமதியை ஆறுதல்படுத்தியது. 'பரவாயில்லை. பிள்ளைக்கும் எவ்வளவு வேலை இருக்கும். நேரே பார்க்கப்போறன்தானே. எவ்வளவு காலத்துக்குப்பிறகு என்ரை பிள்ளையை பார்க்கப் போறன். அவன் இஞ்சை நிற்கிற நாள் முழுக்க அவனோடைதான் என்ரை நேரம் செலவழியும். அவனுக்கு விருப்பமானதொல்லாம் சமைச்சு கொடுக்க வேணும் "வீடெல்லாம் ஒழுங்குபடுத்தவேணும். கன வேலைகள் இருக்கு. என்னாலை இனி படுத்திருக்கேலாது." என்று மிகுந்த உற்சாகத்தோடு சொல்லியபடி எழுந்திருக்க முயன்றாள் சுமதி. ஆனால் எழுந்து நிற்க அவளால் முடியவில்லை. அவளை ஆறுதலாக தாங்கிப் பிடித்து அமர்த்தி அமைதிப்படுத்தினார். மகன் வரப்போகிறான் என்ற சேதி அவளின் நோய்கள் எல்லாவற்றையும் விரட்டியடித்துவிட்ட உணர்வு அவளுக்கு ஏற்பட்டுள்ளது என்பதை சுந்தரம் புரிந்து கொண்டார். அவளிடம் மற்ற விடயங்களை எப்படி உடனேயே புரியவைப்பது என அவருக்கு தெரியவில்லை. ஆனால் சொல்லித்தானே ஆகவேண்டும்.

"நீ பதட்டப்படாதை. உனக்கு சிரமம் கொடுக்கக்கூடாது என நினைத்து அவன் அவனின்ரை நண்பன் வீட்டிலை வந்து நிற்க ஒழுங்குபடுத்திவிட்டான்." என்று அவளுக்கு



சுந்தரம் சொன்னபோது அவளுக்கு கண்கள் கலங்கி விட்டன. "ஏன் என்ரை வருத்தத்தை பிள்ளைக்கு சொன்னனீங்கள். பிள்ளை பாவம். அம்மாவுக்கு சிரமம் கொடுக்கக்கூடாது என நினைச்சிட்டான். அப்பிடியெல்லாம் இல்லை' என்று அவனுக்கு ஒருக்கால் தொலைபேசி எடுத்து உடனே சொல்லுங்கோ" என அவசர அவசரமாக கவலையோடு சொன்னாள். அவளின் உடல்நலத்தையே மகன் விசாரிக்கவில்லை என்பதை அவரால் எப்படி சொல்ல முடியும்? அவளின் மனம் நோகாமல் இருக்கத்தான் இப்படி அவளின் உடல்நலத்தை காரணம் காட்டி விடயத்தை சொன்னார். 'இனி ஒழுங்குமுறையை மாற்றுவது சிரமம்தானே. ஏன் அவனுக்கு இந்த சிரமத்தை கொடுக்க வேணும். பிள்ளை குடும்பத்தோடை அடிக்கடி வந்து பார்ப்பான் தானே. நீ கவலைப்படாதை' என்று அவளை ஆற்றினார். அவளும் அரைமனதோடு அமைதியானாள்.

ஊருக்கு வந்தவுடன் தாங்கள் வந்துவிட்டனர் என்பதை தகப்பனுக்கு தெரியப்படுத்தினான் பிரபு. நண்பர்கள் குடும்பத்துடன் சுற்றுலா செல்ல இருப்பதால் இரண்டு நாட்களுக்கு பின் வீட்டுக்கு வருவதாக சொன்னான். இதனை எப்படி மனைவிக்கு புரியவைப்பது என விளங்காமல் தவித்தார் சுந்தரம். எப்படியோ என்ன வெல்லாமோ சொல்லி சமாளித்தார். இரண்டு நாட்களின் பின் பிரபு மட்டும் தனியே வந்தான். மகனைக் கண்டவுடன் அவனை கட்டிப்பிடித்து இத்தனை நாட்களும் அடக்கிவைத்த ஏக்கங்கள் கரைந்து போகும் அளவுக்கு அழுதாள் சுமதி. 'அம்மா ஏன் இப்பிடி அழுகிறீங்கள். நான்தான் வந்திருக்கிறேனே. இப்பிடி அழுகிறதொல்லாம் எனக்கு பிடிக்காது" என பட்டென்று சொன்னான் பிரபு.அவள் என்ன நிலையில் இருக்கிறாள் என்பதையே உணராத தன் மகனை பார்க்கும்போது சுந்தரத்துக்கு கோபம் கோபமாக வந்தது. தன் கோபத்தை அடக்கிக்கொண்டு, 'இவ்வளவு நாளும் உன்னை பார்க்க முடியாத கவலையிலை இருந்தவள். உன்னை நேரிலை கண்டவுடன் அவையெல்லாம் அழுகையாக வெடித்து

விட்டது" என சொல்லியபடி மனைவியை மெதுவாக அவனிலிருந்து விலக்கி கதிரையில் உட்காரவைத்தார் சுந்தரம்.

'தம்பி உன்ரை மனுசியும் பிள்ளையளும் எங்கை? கலா வீட்டுக்கு போட்டு வருவினமோ." என்று சுமதி கேட்டபோது "இல்லை அம்மா. அவையளை கூட்டிவரேல்லை. அவையளுக்கு ஒரே அலுப்பாய் இருக்காம். என்னை மட்டும் போகச் சொல்லிச்சினம். அதுதான் நான் மட்டும் வந்தனான். நானும் கன நேரம் நிக்கேலாது அம்மா. கெதியா போகப்போறன்.எனக்கும் களைப்பாய் இருக்கு. நாளைக்கு திருகோணமலைப்பக்கம் போகப்போறம். இப்ப போய் ஓய்வெடுத்தால்தான் நாளைக்கு உற்சாகமாய் சுற்றுலாவில மகிழ்ச்சியாய் இருக்கலாம்." என்றான். "அப்ப அவையளை பார்க்க முடியாதா?" கேட்டாள் சுமதி. அவளின் குரல் மிகவும் சோர்வாகக் காற்றில் மிதந்து சென்றது. "திரும்பி போறதுக்கிடையிலை எப்பிடியாவது ஒருநாள் கூட்டிவாறன்" என்று சொல்லிவிட்டு புறப்பட தயாரானான் பிரபு.'தம்பி நிண்டு சாப்பிட்டிட்டு போ. உனக்காக உன்ரை அக்கா சமையல் செய்து கொண்டிருக்கிறாள்." என்று சுமதி முயன்று சத்தமாகச் சொல்ல முயல்கையில்,கலாவும் சமையலறையிலிருந்து வெளியே வந்தாள். 'ஓ! அக்காவும் இங்கைதான் நிக்கிறாவோ. அப்ப அக்காவையும் இங்கேயே பார்த்தாச்சு" என்று சொல்லிய பிரபு, 'அக்கா எப்பிடி இருக்கிறாய் "என்று கேட்டுவிட்டு பதிலுக்கும் காத்திருக் காமல் 'நான் இன்னொரு நாளைக்கு வந்து சாப்பிடுகிறன். இப்ப அவசரமாய் போகவேணும்." என்று சொல்லிவிட்டு தான் கொண்டு வந்த அன்பளிப்பு பொதியை தகப்பனின் கையில் ஒன்றும், கலாவின் கையில் ஒன்றுமென கொடுத்துவிட்டு புறப்பட்டான்.


எல்லாமே சில மணித் தியாலங்களுக்குள் நடந்து முடிந்துவிட்டது. தனது கணவன், பிள்ளைகள் பற்றி ஒரு வார்த்தையும் கேட்காத தம்பியை நினைக்க கலாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. மகன் வந்ததும்,அவனோடு பேசிய அந்தக் கணப்பொழுதுகள் மனதுக்குள் பரவசத்தை ஏற்படுத்த, பேரப்பிள்ளைகளை மகன் கூட்டிவருவான், அவர்களோடு எப்படியெல்லாம் கதைத்து பேசவேண்டும் என்ற தவிப்பில் இருந்த சுமதி மகன் போன திசையை இமைவெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். என்ன நடந்ததோ ... சற்று நேரத்தின் பின் அவள் முணுமுணுப்பு வெளியில் கேட்கத் தொடங்கியது ... 'பிள்ளைக்கும் களைப்புதானே பாவம். அவன் நாளைக்கு கட்டாயம் வருவான். என்னோடைதான் நிற்பான். இப்ப அவசரத்திலை அப்படி சொன்னான். என்ரை பிள்ளைக்கு என்னோடை நிற்கவேணும் என்ற விருப்பம் மட்டும் தான் இருக்கு. அவன் என்ரை செல்லம். என்னை பார்க்க அங்கையிருந்து பறந்து வந்தவன் நாளைக்கு வருணியையும், பேரப்பிள்ளை யளையும் கூட்டிக்கொண்டு வருவான். அவன் சுற்றுலாவுக்கெல்லாம் போக மாட்டான். இந்த அம்மாவுக்கு பிறகுதான் அவனுக்கு எல்லாமே..." கூறியபடியே இருந்தவள் மெல்ல மெல்ல நித்திரையானாள். மீண்டும் எழுந்து சுமதி இப்படி சொல்லிக் கொண்டே இருக்கப்போகின்றாள் என்பதை சுந்தரமும் கலாவும் புரிந்து கொண்டனர்.. மகன் வராமலே இருந்திருக்கலாம் என சுந்தரம் எண்ணிக்கொண்டார். வந்து அவளின் நோயை அதிகரித்து வைத்துவிட்டு சென்றிருக்கிறான் என மகனின் மீது ஆத்திரம் தான் அவருக்கு வந்தது. லண்டனுக்கு புறப்படுவதற்கு முதல்நாள் பிரபு குடும்பத்தோடு வந்தான். எல்லோரையம் பார்த்து உற்றசாகமடைந்த சுமதி வருணி எப்படி இருக்கிறாய்?' என்று கேட்டாள். 'நல்லாயிருக்கிறம் மாமி' என்று சொன்னாள். பேரப்பிள்ளைகளை தன் அருகில் வருமாறு அழைத்தாள். அவர்கள் கிட்டவே வர மறுத்தார்கள். வருணி வலுக்கட்டாயமாக அவளுக்கு பக்கத்தில் பிள்ளைகளை அழைத்து சென்றாள்.அவர்களை தடவ அவள் முயன்றபோது அதனை தட்டிவிட்டு பிள்ளைகள் வருணிக்கு கிட்ட போய் நின்று கொண்டார்கள். கலாவின் பிள்ளைகள் அவர்களோடு கதைக்க முயன்றபோது அவர்களுடன் கதைக்கவில்லை. தமிழ் தெரியாத அவர்களுக்கு யாரும் கதைப்பது எதுவும் புரியவில்லை. அதனால் எவருடனும் எதுவும் பேசவில்லை. கலாவும், தில்லையும், சுந்தரமும் இவற்றையெல்லாம் பார்த்து மனதுக்குள் கொதித்து கொண்டு நின்றார்கள். திரும்பி போகின்றவர்களிடம் கோபித்து கதைத்து என்ன பயன் என்பதால் அமைதியாக நின்றார்கள். 'சரி அம்மா. நாங்கள் வெளிக்கிடப்போறம்.' என்று பிரபு சொல்ல, 'நாளைக்கு வருவாய்தானே தம்பி " என கேட்டாள் சுமதி. அதனைக் கேட்ட பிரபு 'இல்லையம்மா இன்றைக்கு லண்டன் புறப்படுகிறம்.' என்று சொன்ன போது 'சரி தம்பி' என்றாள் சுமதி. அவர்கள் புறப்பட்டு சென்று விட்டார்கள்.

அதன் பின் மனைவி அருகில் வந்த சுந்தரம்' தம்பி வெளிக்கிடப்போறன் என்று சொன்னவுடன் நீ அழுதிடுவாய் என பயந்து விட்டேன்' என்று அவளின் தலையை வருடியபடி சொன்னபோது 'என்ன..! தம்பி போயிட்டானோ..!' என்று ஆச்சரியமாக கேட்டாள் சுமதி. சுந்தரம் திகைத்துப்போனார். எதுவுமே சொல்லவில்லை.

பிரபு வந்து போனபின் அவளின் செயற்பாடுகள் மெல்ல மெல்ல வித்தியாசமாக மாறத் தொடங்கின. அவள் யாருடனும் பேசிக்கொள்வது குறைந்து குறைந்து இறுதியில் தடைப்பட்டே போய்விட்டது.

தனக்குள் தானே மட்டும் எப்போதும் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருப்பாள். கலா மருந்து கொடுத்தால் அடம் பிடிக்க மாட்டாள். தொலைபேசியையும் அவள் மறந்துவிட்டாள். இப்போது எந்த மணியொலியும் அவளை சலனப்படுத்துவதில்லை. சாப்பாடு தண்ணி கேட்பதில்லை. கொடுப்பதில் ஒரு அகப்பை மட்டும் எதுவும் சொல்லாமல் சாப்பிடுவாள். மிகுதி வீணே கிடந்து காயும்.

தனது வேலைகள் எதையும் அவளாக உணர்ந்து செய்ய முடியாது. எல்லாமே சுந்தரமும், கலாவும்தான் செய்வார்கள்.. கலாவுக்கு சிரமம் கொடுப்பதை குறைத்து இப்போது சுந்தரம் ஒரு குழந்தைக்குத் தந்தையாக தனது பணிகளைச் செய்யத் தொடங்கினார். இனி சுமதி உலகமே தெரியாத ஒரு குழந்தை மட்டுமே.



வங்கி நிறுவனங்கள் இராணுவ நிறுவனங்களை விட மிக ஆபத்தானவை என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன் செலவழிக்கும் பணம் சந்ததி யினராலும்கூட திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமென்ற கொள்கையானது நிதியளிப்பதன் பெயரில் பலருடைய எதிர்காலத்தை சூறையாடுகிறது -*தாமஸ்ஜெபர்சன்-அமெரிக்காவின்முன்னாள்ஜனாதிபதி*

# நவக்கிரகங்களை அட்டம கிரகங்களாக்கியது தவறு

**வாதிடுகிறார் மத்திய புளோரிடா பல்கலைக்கழக கிரகவியல் விஞ்ஞானி பிலிப் மெட்ஸ்ஜெர்**


புளூட்டோ கிரகம்

மேற்படி விஞ்ஞானி தனது ஆய்வுகளின்அடிப்படையில் "புதிய ஆராய்ச்சியின்படி 'புளூட்டோ அதன் கிரக நிலையை இழந்துவிட்டது' என்று கூறுவது, பெறுமதியிழந்துவிட்ட கருத்தாகும்." என்று தெரிவித்துள்ளார்.

"2006 ஆம் ஆண்டில் சர்வதேச வானியல் சங்கத்தின் உலகளாவிய வானியல் நிபுணர் குழுவொன்று கிரகம் அல்லது கோள் என்பதற்கு வரையறை ஒன்றைத் தாபித்தது. அது, யாதெனில், "கிரகம் என்று ஏற்றுக்கொள்ளக்கூடிய அது அதன் சுற்றுப்பாதையை தெளிவாகக் காட்டவேண்டும். அல்லது இன்னொரு வகையில் கூறினால், அதன் மிகப் பெரிய ஈர்ப்புச்சக்தி அதன் சுற்றுப்பாதையில் இருக்க வேண்டும்" (வேறொரு ஈர்ப்புச் சக்தியால் பாதிக்கப்படாமல்) என்பதாகும்.

நெப்டியூன் கிரகத்தின் ஈர்ப்புச்சக்தி, அதன் அயற் கிரகமாகிய புளூட்டோவைப் பாதித்ததிலிருந்தும் புளூட்டோ தனது சுற்றுப்பாதையை உறைநிலையிலுள்ள வாயுக் களையும் பொருட்களையும் கியுப்பெர் பட்டியுனுள் பகிர்ந்து கொள்வதாலும் அது, ஒரு கிரகம் என்ற நிலையில் இருந்து விலக்கி வைக்கப்பட்டது.

எப்படியாயினும், தற்போது, புளோறிட பல்கலைக் கழகத்தின் விண்வெளி நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர் பிலிப் மெட்ஸ்ஜெர், மேற்படி கிரகத்தை வரையறுப்பதற்கான நியமம் அல்லது தராதரம், இலக்கியங்களில் கிரகங்களை வகைப்படுத்தும் ஆய்விற்கு ஆதாரமளிக்கவில்லை என்று 07-09-2018 சர்வதேச அறிவியல் தினத்தன்று இணைய தளப் பத்திரிகை ஒன்றிற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

முன்னணி எழுத்தாளர், பிலிப் மெட்ஸ்ஜெர், கடந்த 200 ஆண்டுகளுக்கான இலக்கியங்களை மறுபரிசீலனை செய்தார். 1802 ஆம் ஆண்டிலிருந்தான இலக்கியங்களை ஆய்வு செய்ததில் "கிரகம் அதன் சுற்றுப்பாதையை தெளிவாகக் காட்டும்" என்ற வரையறையை ஒரேயொரு பிரசுரத்தில் கண்டுபிடித்தார். அதுவும் (பொய்யான) நிருபணமாகாத காரணங்களின் அடிப்படையில் அமைந்ததாக இருந்தது.


மெட்ஸ்ஜெர் சொல்கிறார், கிரகங்களை ஆய்வு செய்யும் விஞ்ஞானிகள் கலிலியோவின் காலத்திலிருந்து சனியின் சந்திரனாகிய 'டைட்டான்' யும் வியாழனின் சந்திரனாகிய 'இயுரோபா'வையும் வழமையாக கிரகம் என்றுதான் அழைத்து வந்துள்ளார்கள்.

"அனைத்துலக வானியலாளர் சங்கத்தின் இந்த வரையறை, கிரகவியல் விஞ்ஞானத்தின் அடிப்படை நிலையாக இதனைக் தெரிவித்திருக்கலாம். ஆனால், இதனை ஆய்வுகளில் யாரும் பயன்படுத்துவதில்லை. மேற்படி அனைத்துலக வானியலாளர் சங்கத்தின் வரை யறையை மீறிய உதாரணங்களாக அண்மைக்கால கிரகவியல் விஞ்ஞானிகளின் 100 இற்கு மேற்பட்ட பெயர்ப் பட்டியலை நாம் இப்பொழுது வைத்திருக்கிறோம். செயற்பாட்டுக் காரணத்துக்காக அனைத்துலக வானியலாளர் சங்கம் இதனைப் பயன்படுத்துகிறது. ஆனால், இது ஒரு துல்லியமற்ற வரையறை ஆகும்" என்று மெட்ஸ்ஜெர் கூறினார். மேலும் அவர் "உலக வானியலாளர் சங்கம், கிரகம் பற்றி தெரிவிக்கும் வரையறையில் "தெளிவான சுற்றுப்பாதை" என்பதனால், எதைக் கருதுகின்றனர் என்பதை அவர்கள் சொல்லவில்லை. இலக்கியரீதியாக எடுத்துப் பார்ப்போமானால் அப்படியொரு கிரகம் அங்கே இல்லை. ஏனென்றால், சுற்றுப்பாதையைத் தெளிவாகக்




புளூட்டோவின் பெரிய சந்திரன் சரோன்


1930 இல் கண்டு பிடிக்கப்பட்ட கிரகம் புளூட்டோ ஆரை 1188 km




**புளுட்டோவின் தரைத்தோற்றம்**
**(ஈர்ப்புவிசை 0.6 மீற்றர்/செக்கன் $^2$ )**



**புளுட்டோவின் தரையில் குளிர்ச்சியடைந்த நைதரசனின் படிவு**
**-232 to-210 பாகை செல்சியஸ் , அமுக்கம் ஒரு பஸ்கால்**



**புளுட்டோவின் பல படைகளைக் கொண்ட வளிமண்டலம்**

காட்டும் எந்தக்கிரகமும் இல்லை.

அதாவது கிரகவியல் விஞ்ஞானிகள். சொல்வது என்னவென்றால். இலக்கிய மீள்பார்வை பின்வரும் விடயத்தையே வலி யுறுத்துகிறது. "கிரகங்களும் நட்சத் திரங்களும் உண்மை யில் கீழே சொல்லப்படும் விதமாகத் தான் வேறுபடுத்தப்பட்டன. 1950களின் ஆரம்பத்தில் ஜெரார்ட் குயிப்பெர் என்ற விஞ்ஞானி ஒரு பத்திரிகையை வெளியிட்டார். அதில் கோள்களும், உடுக்களும் எவ்வாறு தோற்றம் பெற்றன என்பதை அடிப்படையாகக் கொண்டே அவை வேறுபடுகிறது" என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

விஞ்ஞானி மெட்ஸ்ஜெர் மட்டுமல்ல லௌரல், மேரிலாந்திலுள்ள ஹொப்கின்ஸ் பல்கலைக் கழக விஞ்ஞானியான கிர்பி ரன்யன். உலகவிஞ்ஞான சங்கத்தின் 2006 ஆம் ஆண்டில் கிரகங்களை வேறுபடுத்துவதற்கு நிர்ண யிக்கப்பட்ட- 'தெளிவான சுற்றுப்பாதையைக் காட்டு வது' என்ற வரையறை தவறானது. என்று இலக் கிய மீளாய்வுகள் காட்டு கின்றன. ஆகவே தெளி வான சுற்றுப்பாதையைக் காட்டுவது என்பது. நியம மாக அமைய முடியாது உலக விஞ்ஞான சங்கத் தின் இந்த வரையறை வரலாற்றில் தவறான ஒரு உரிமைகோரல் என்று நாம் சுட்டிக்காட்டினோம் ஆகவே இதை புளுட்டோ கிரகத்துக்கு பயன்படுத்துவது தவறாகும்" என்று புளுட்டோ ஒரு கிரகம்தான் என்பதற்கு ஆதரவாக மேற்படி கூறியிருந்தார்.

மெட்ஸ்ஜெர் " சுற்றுப்பாதை என்பது இயக்க ஆற்றல் பொறுத்தது. இயக்க ஆற்றல் என்பது மாறக்கூடியது. மாற்றம் என்பது மாறாமல் இருக்கும். எனவே இதிலும்பார்க கிரகத்தின் வரையறையானது. அதன் உள்ளார்ந்த தன்மையை அடிப்படையாக் கொண்டதாக இருக்க வேண்டும்" என்றும். "எனவே. அவை வான்பொருட்களின் அடிப்படை விளக்கம் அல்ல. அவை தற்கால யுகத்தில் உள்ள வான் பொருட்களின் வெறும் இருப்பு இயக்கம் மட்டும்தான்" என்றும் தெரிவித்தார்.

மேலும் மெட்ஸ்ஜெர் தெரிவிப்பதும் யாதெனில், அதன் ஈர்ப்புவிசை பெரியதாக இருக்க வேண்டும். அதாவது "அதன் வடிவத்தை கோளவடிமாக்க அனுமதிக்கக்கூடிய அளவுக்கு பெரியதாக இருத்தல் கிரகம் அல்லது கோளை வரை யறுப்பதற்கு அடிப்படையாக அமையமுடியும்"

இது ஒரு தன்னிச்சையான வரையறையல்ல. வான் பொருளின் கூர்ப்பு அல்லது பரிணாம மாற்றத்தில் இது ஒரு முக்கியமான மைல்கல் ஆகும். ஏனென்றால். இது நிகழும் போது வான்பொருளின் உள்ளகத்தே அதனுள் புவியியல் மாற்றங்களுக்கான செயற்பாடுகளை இது தொடக்குகிறது.

முக்கியமாக புளுட்டோவானது. நிலத்தடிச் சமுத்திரம். பல்படைகொண்ட வளிமண்டலம். சேதனசேர்வைகள். பழங்கால ஏரிகள் மற்றும் அதன் பெரிய சந்திரன் 'சரோன்' உட்பட பல சந்திரன்கள் காணப்படுவதற்கான சான்று களையும் கொண்டுள்ளது என்று மெட்ஸ்ஜெர் குறிப்பிட்டார்.

அத்தோடு. புளுட்டோ. செவ்வாய்க்கிரகத்திலும் பார்க்க ஆற்றல் மிக்கது. துடிப்புள்ளது மட்டுமல்லாமல் அதிகமான சிக்கல்வாய்ந்த நில அமைப்பையும் கொண்டது என மெட்ஸ்ஜெர் குறிப்பிட்டு புளுட்டோ ஒரு கிரகம் என்பதற்குரிய தனது வாதங்களை முன் வைத்துள்ளார்.

ஒரு தவறான வரைறையால் சிறப்பான குணாம் சங்களை கொண்ட இந்தக் கிரகத்தைப் பற்றிய கற்றலை உலகம் இழக்க நேரிடலாம் என்றும் விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துள்ளனர். உலக விஞ்ஞான சங்கம் இவற்றைப் புரிந்து கொள்கிறதா என்பதனைப் பொறுத்திருந்து நோக்குவோம்.


- தொகுப்பு தாரகன்

# கிழட்டுப்பூனை

ஜப்பானிய சாமுராஜ் (வீரன்) ஒருவன் இருந்தான். அவன் வீட்டில் எலித்தொல்லை அதிகமாக இருந்தது. அதிலும் குறிப்பாக ஒரு முரட்டு எலி அந்த வீட்டில் இருந்த உணவுப் பொருட்களைத் திருடித் தின்றபடியே இருந்தது. வீட்டுப் பூனையால் அந்த எலியைப் பிடிக்கவே முடியவில்லை. அத்துடன் அந்த எலி பூனையைப் பாய்ந்து தாக்கிக் காயப்படுத்தியது. ஆகவே, சாமுராஜ் தனது அண்டை வீட்டில் இருந்து பூனைகளை அழைத்துவந்து முரட்டு எலியைப் பிடிக்க முயற்சி செய்தான்.

இரண்டு பூனைகளும் முரட்டு எலிகளைத் துரத்தின. ஆனால், அந்த முரட்டு எலி ஆவேசத்துடன் பாய்ந்து தாக்கி, அந்தப் பூனைகளையும் காயப்படுத்தியது. முடிவில் சாமுராஜ் தானே அந்த எலியைக் கொல்வது என முடிவு செய்தான். ஒரு தடியை எடுத்துக்கொண்டு துரத்திச்சென்றான். ஆனால், எலி அவனிடமிருந்து தப்பியோடியது. முடிவில் குளியலறைப் பொந்துக்குள் ஒளிந்துகொண்டது. அவன் குனிந்து அதனைத் தாக்க முனைந்தான். ஆனால், வேறொரு வழியாக எலி வெளியே வந்து அவன் மீதும் பாய்ந்து தாக்கியது. அதில் அவனும் காயமடைந்தான். ஒரு முரட்டு எலியை நம்மால் பிடிக்க முடியவில்லையே, நாமெல்லாம் ஒரு சாமுராஜா? என அவமானமடைந்தான்.


அவனது மன வேதனையை அறிந்த ஒரு நண்பர், "நண்பா அருகில் உள்ள மலையில் ஒரு கிழட்டுப் பூனை இருக்கிறது.அந்தப் பூனையால் எந்த எலியையும் பிடித்துவிட முடியும்" என ஆலாசனை சொன்னார்.சாமுராஜ்ும் வேறு வழியில்லாமல் அந்தக் கிழட்டுப்பூனையைத் தேடிப்போய் உதவி கேட்டான். உடனே பூனையும் சாமுராஜ்க்கு உதவி செய்வதாக ஒப்புக் கொண்டது.அதன் படி மறுநாள் சாமுராஜ் வீட்டுக்கு அந்தக் கிழட்டுப்பூனை வருகைதந்தது. பூனை இருப்பதை அறிந்த எலி தயங்கித் தயங்கி வெளியில் வந்தது.




கிழட்டுப் பூனை தன் இடத்தை விட்டு நகரவேயில்லை. எலி தைரியமாக அங்குமிங்கும் ஓடுவதும் வெண்ணைய்க் கட்டிகளைத் திருடித் தின்பதுமாகவிருந்தது. "மற்றப் பூனைகளாவது எலியைத் துரத்த முயற்சியாவது செய்தன. ஆனால், இந்தக் கிழட்டுப்பூனையோ அசையவே மறுக்கிறதே" என சாமுராஜ் அதன் மீது எரிச்சல் அடைந்தான். ஒரு நாள் முழுவதும் அந்தப் பூனை அசையாமல் அப்படியே இருந்தது.

மறுநாள் வழக்கம்போல் எலி வளையை விட்டு வெளியே வந்தது. சமையல் அறைக்குள் போய் இனிப்பு உருண்டைகளை ஆசையாகத் தின்றுவிட்டு மெதுவாகத் திரும்பியது. அடுத்த நொடி திடீரெனப் பாய்ந்த அந்தக் கிழட்டுப்பூனை, ஒரே அடியில் அந்த எலியைப் பிடித்து கடித்துக் கொன்றுபோட்டது. சாமுராஜ் அதை எதிர்பார்க்கவே யில்லை. "இவ்வளவு பெரிய முரட்டு எலியை ஒரே அடியில் எப்படி அந்தக் கிழட்டுப்பூனை வீழ்த்தியது" என வியப்படைந்தான்.


இந்தச் செய்தியை அறிந்துகொண்ட பூனைகளெல்லாம், ஒன்றுகூடி "எப்படி இந்த முரட்டு எலியைக் கொன்றாய்...? இதில் என்ன சூட்சுமம் இருக்கிறது..?" என்று கேட்டன. "ஒரு



சூட்சுமமும் இல்லை. நான் பொறுமையாக இருந்தேன். நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதை அந்த எலி நன்றாக அறிந்திருந்தது. ஆகவே, அது தன்னைத் தற்காத்துக் கொள்ளப் பழகியிருந்தது. நான் நிதானமாகப் பொறுமையாகக் காத்துக்கிடந்தபொழுது, அது என்னைச் செயலற்றவன் என்று நினைத்துக் கொண்டது. ஆயுதத்தை விடப் பலமடங்கு வலிமையானது நிதானம். எதிரி நாம் செய்யப்போவதை ஊகிக்க முடிந்தால், அது நமது பலவீனம். வலிமையானவன் தனது சரியான சந்தர்ப்பத்துக்காக காத்துக் கொண்டிருப்பான்" என்றது அந்தக் கிழட்டுப்பூனை.



அப்போது மற்றொரு பூனை கேட்டது "நான் பாய்ந்து தாக்குவதற்கு



பல ஆண்டுகள் பயிற்சி எடுத்திருக்கிறேன். என் நகங்கள் கூடக் கூர்மையானவை. ஆனாலும் என்னால் ஏன் அந்த முரட்டு எலியைக் கொல்ல முடியவில்லை"

"உன் பலத்தைப் போலவே எலியும் தன்னைக் காத்துக்கொள்ளப் பழகியிருந்தது. எல்லா எலிகளும் பூனைகளுக்குப் பயந்தவை இல்லை. நான் ஒரு பூனை என்ற அகம்பாவம் உன்னிடம் மேலோங்கியிருக்கும். ஆகவே, ஒரு எலி திருப்பித்தாக்க முயற்சிக்கிறது என்றதுமே நீ பயப்படத் தொடங்கியிருப்பாய். ஆகவே உன்னைத் துரத்தியடித்து எலி காயப்படுத்தியது. ஆவேசமாகக் கூச்சலிடுபவர்கள், கோபம் கொள்கிறவர்கள், அவசரக் காரர்கள் தங்களின் பலவீனத்தை உலகுக்கு வெளிச்சமிட்டுக் காட்டுகிறார்கள். பலவான் தனது பேச்சிலும் செயலிலும் அமைதியாகவே இருப்பான். உலகம் அவனைப் பரிகசிக்கவும் கூடும். ஆனால், தகுந்த நேரத்தில் அவன் தன் திறமையை நிரூபித்து வெற்றியடைவான்!" என்றது கிழட்டுப்பூனை.

சாமுராஜ்க்கு மட்டுமில்லை சாமானியர்களுக்கும் இந்தக் கதை பொருந்தக் கூடியதே. மற்றப் பூனைகளிடம் இல்லாத ஒரு தனித்திறமையும் கிழட்டுப் பூனையிடம் கிடையாது. ஆனால், அது தன் பலத்தை மட்டுமே நம்பாமல் எதிரியின் பலவீனத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டது. வாய்ச்சவடால் விடுவதைவிட காரியம் செய்து முடிப்பது முக்கியம் என அனுபவம் அதற்கு உணர்த்தியிருந்தது. காத்திருப்பது முட்டாள் தனமில்லை என அந்தப் பூனை உணர்ந்திருந்ததால் வெற்றி கண்டது.

-நன்றி இணையம்

# The Three Little Pigs

Once upon a time there was an old mother pig who had three little pigs and not enough food to feed them. So when they were old enough, she sent them out into the world to seek their fortunes.


The first little pig was very lazy. He didn't want to work at all and he built his house out of straw. The second little pig worked a little bit harder but he was somewhat lazy too and he built his house out of sticks. Then, they sang and danced and played together the rest of the day.

The third little pig worked hard all day and built his house with bricks. It was a sturdy house complete with a fine fireplace and chimney. It looked like it could withstand the strongest winds.

The next day, a wolf happened to pass by the lane where the three little pigs lived; and he saw the straw house, and he smelled the pig inside. He thought the pig would make a mighty fine meal and his mouth began to water.

So he knocked on the door and said:

"Little pig! Little pig!
Let me in! Let me in!"





But the little pig saw the wolf's big paws through the keyhole, so he answered back:

"No! No! No!
Not by the hairs on my chinny chin chin!"

Then the wolf showed his teeth and said:

"Then I'll huff
and I'll puff
and I'll blow your house down."

So he huffed and he puffed and he blew the house down! The wolf opened his jaws very wide and bit down as hard as he could, but the first little pig escaped and ran away to hide with the second little pig.

The wolf continued down the lane and he passed by the second house made of sticks; and he saw the house, and he smelled the pigs inside, and his mouth began to water as he thought about the fine dinner they would make.

So he knocked on the door and said:


"Little pigs! Little pigs!
Let me in! Let me in!"


But the little pigs saw the wolf's pointy ears

through the keyhole, so they answered back:
"No! No! No!
Not by the hairs on our chinny chin chin!"
So the wolf showed his teeth and said:
"Then I'll huff
and I'll puff
and I'll blow your house down."

So he huffed and he puffed and he blew the house down! The wolf was greedy and he tried to catch both pigs at once, but he was too greedy and got neither! His big jaws clamped down on nothing but air and the two little pigs scrambled away as fast as their little hooves would carry them.

The wolf chased them down the lane and he almost caught them. But they made it to the brick house and slammed the door closed before the wolf could catch them. The three little pigs they were very frightened, they knew the wolf wanted to eat them. And that was very, very true. The wolf hadn't eaten all day and he had worked up a large appetite chasing the pigs around and now he could smell all three of them inside and he knew that the three little pigs would make a lovely feast.So the wolf knocked on the door and said:
"Little pigs! Little pigs!
Let me in! Let me in!"





But the little pigs saw the wolf's narrow eyes through the keyhole, so they answered back:
"No! No! No!
Not by the hairs on our chinny chin chin!"
So the wolf showed his teeth and said:
"Then I'll huff
and I'll puff
and I'll blow your house down."

Well! he huffed and he puffed. He puffed and he huffed. And he huffed, huffed, and he puffed, puffed; but he could not blow the house down. At last, he was so out of breath that he couldn't huff and he couldn't puff anymore. So he stopped to rest and thought a bit.

But this was too much. The wolf danced about with rage and swore he would come down the chimney and eat up the little pig for his supper. But while he was climbing on to the roof the little pig made up a blazing fire and put on a big pot full of water to boil. Then, just as the wolf was coming down the chimney, the little piggy pulled off the lid, and plop! in fell the wolf into the scalding water.

So wolf couldn't escape. then after wolf died. The three little pigs were happy.

(-thank for Website)

# NATURE WORD SEARCH

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| H | O | K | A | V | S | T | P | H | A | W | S | S | E | D |
| K | X | H | H | E | F | L | X | J | K | H | S | K | N | R |
| F | I | E | L | D | T | R | A | H | A | D | F | F | O | I |
| S | N | I | A | T | N | U | O | M | U | W | L | O | T | B |
| F | L | O | W | E | R | S | B | O | I | Y | G | R | S | S |
| E | N | O | Z | O | S | H | L | U | W | N | B | E | U | Y |
| L | I | O | S | C | A | C | T | I | S | T | A | S | T | C |
| L | G | Q | U | A | N | A | N | R | Y | H | X | T | M | S |
| K | O | X | W | G | D | D | I | T | A | S | E | U | T | T |
| E | S | C | R | Z | G | Y | W | X | B | E | A | S | M | C |
| S | E | Z | E | L | W | W | W | Z | L | D | R | O | S | E |
| B | X | R | L | A | O | M | O | J | R | E | I | V | L | S |
| X | K | L | T | R | N | Y | K | Z | V | R | N | P | K | N |
| V | F | K | M | L | K | H | E | I | R | J | T | M | A | I |
| T | R | S | R | S | S | G | R | K | Y | T | Q | A | A | Z |

| | | |
|---|---|---|
| ANIMALS | BIRD | BUSHES |
| CLOUDS | EARTH | FIELD |
| FLOWER | FOREST | INSECTS |
| MOUNTAINS | OCEAN | OZONE |
| RIVER | SAND | SKY |
| SOIL | STONE | TREE |
| WIND | WORMS | |

# விடுகதைகள்

1. படபடக்கும், பளபளக்கும், மனதுக்குள் இடம் பிடிக்கும் அது என்ன?
2. தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன?
3. நிலத்தில் முளைக்காத செடி நிமிர்ந்து நிற்காத செடி அது என்ன?
4. எவ்வளவு ஓடினாலும் எனக்கு வியர்வை வராது, வீட்டில் வளரும் என்னை திருடனுக்குப் பிடிக்காது நான் யார்?
5. கையை வெட்டுவார், கழுத்தை வெட்டுவார் ஆனாலும் நல்லவர் யார் அவர்?
6. கையில்லாமல் நீந்துவான் காலில்லாமல் ஓடுவான் அவன் யார்?
7. கடிபடமாட்டான் பிடிபடமாட்டான் அவன் யார்?
8. இளமையில் பச்சை, முதுமையில் சிவப்பு, குணத்திலே எரிப்பு விடைதெரியுமா?
9. மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து பிடித்திருப்பவர்களைக் காப்பாற்றும் என்னை, இந்த இளம் பெண்கள் அழகுக்காகப் பிடித்திருக்கிறார்கள் நான் யார்?
10. நீரிலும் வாழ்வேன் நிலத்திலும் வாழ்வேன் நீண்ட ஆயுள் உடைய எனக்கு இறைவன் கொடுத்த கவசம் இருக்கு விடைதெரியுமா?
11. முழு உலகமும் சுற்றிவரும் ஆனால் ஒரு மூலையில் இருக்கும் அது என்ன?
12. துவாரம் இல்லாத இடமே இல்லை. இருந்தாலும் நீரைப் பிடித்து வைத்திருக்கும் அது என்ன?
13. ஆகாராமாக எதைத் தந்தாலும் சாப்பிடுவேன். ஆனால் நீரைக்குடிக்கத் தந்தால் இறந்துவிடுவேன். நான் யார்?
14. முட்டையிடும் குஞ்சு பொரிக்காது. கூட்டில் குடியிருக்கும் ஆனால் கூடுகட்டத் தெரியாது. குரலில் இனிமையுண்டு சங்கீதம் தெரியாது. அது என்ன?
15. வாயிலிருந்து நூல் போடுவான் மந்திரவாதியுமில்லை. கிளைக்குக் கிளை தாவுவான் குரங்குமில்லை. வலைவிரித்துப் பதுங்கியிருப்பான் வேடனுமில்லை. அவன் யார்?

1. பட்டாசு
2. அன்னாசிப்பழம்
3. தாடி
4. நாய்
5. தையற்காரர்
6. படகு
7. தண்ணீர்
8. மிளகாய்
9. குடை
10. ஆமை
11. முத்திரை
12. பஞ்சு
13. நெருப்பு
14. குயில்
15. சிலந்தி


மாணவர்களே!

தளவாடியினால் (முகம் பார்க்கும் கண்ணாடி) இந்த விடையைப் பாருங்கள் சரியாகத் தெரியும்.

# புதிர்

## ஆர்க்கிமிடிஸ் தீர்த்த புதிர்


அரசர் இரண்டாம் ஹியரோ தனது யுத்தவெற்றிகளை கொண்டாடுவதற்காக கோவிலொன்றுக்கு தங்கக் கிரீடம் ஒன்றை வழங்க நாடினார். அதற்காக கொல்லனுக்கு தூய தங்கம் வழங்கியிருந்தார். கொல்லனும் அரசரின் கட்டளைப்படி கிரீடத்தை செய்து கொடுத்தான். ஆனால், கொல்லன் கிரீடத்தில் தங்கத்துடன் வெள்ளி கலந்திருப்பான் என்ற வதந்தி பரவியது. ஆனால், அரசன் உண்மையை அறியாமல் அவனை தண்டிக்க விரும்பவில்லை. எனவே அவர் இப்புதிரை சிறந்த கணித மேதையிடம் ஒப்படைத்தார். இதன் பிறகு ஆர்க்கிமிடீஸ் ஒரு நாள் குளிக்கும் போது, குளியல் தொட்டியில் தண்ணீரின் உயரம், தான் உள்ளே இறங்கும் போது உயருவதைக் கண்டார். இதை வைத்து அரசரின் கேள்விக்கு விடை கண்டுவிடலாமே என்று உணர்ந்து யுரேக்கா ( கண்டுபிடித்துவிட்டேன்) என்று கத்திக்கொண்டு தனது உடைகளையும் அணியாமல், வீதியில் ஓடினார். இத்தத்துவத்தின் மூலம் அவர் தங்கம், வெள்ளியின் அடர்த்தியின் அளவை ஒப்பிட்டு கொல்லன் கிரீடத்தில் வெள்ளி கலந்ததை நிரூபித்தார். ஒரு பாய்மத்தினுள் (திரவம் அல்லது வாயு) அமிழ்த்தப்பட்ட ஒரு பொருளின் மீது அப்பாய்மம் செலுத்தும் மிதப்பு-விசை அப்பொருளினால் இடம்பெயர்க்கப்பட்ட பாய்மத்தின் நிறைக்குச் சமம் எனக்கூறுகிறது 'ஆர்க்கிமிடிஸ்' விதி. இன்னொருவகையில் கூறுவோமானால், ஒரு பொருள், ஒரு நீர்மத்தினுள் மூழ்கியிருக்கும்போது அது இழந்ததாகத் தோன்றும் எடை அதனால் வெளியேற்றப்பட்ட நீர்மத்தின் எடைக்குச் சமம். இத்தத்துவம் முழுமையாக அமிழ்த்தப்பட்ட பொருளுக்கும் பொருந்தும். ஒரு பகுதியாக அமிழ்த்தப்பட்ட பொருளுக்கும் பொருந்தும். ஆனால், பொருளின் எடையின்மை நிலையில் ஆர்க்கிமிடீஸ் தத்துவம் உண்மையிராது.



# தரம்5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - பகுதி 1

♦ ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

♦ 1 ஆம், 2 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவைப் பூர்த்தி செய்வதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

01. 

1)  2) 


02. 


1)  2) 

♦ கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

03.  ____________ , ____________

1.  2.  3. 

04.  ____________





05. எல்லா மாணவர்களுக்கும் பொதுவான பண்பு

1) தினமும் வீட்டுப்பாடம் தொடர்பான வேலைகளில் ஈடுபடுதல்.
2) அதிக எண்ணிக்கையான நண்பர்களைக் கொண்டிருத்தல்.
3) ஏதேனும் ஒரு வகுப்பில் கல்வி கற்றல்

06. தேன்கூடு ஒன்றில் உள்ள தேனீக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நிமிடத்திற்கும் இரட்டிப்பாகமாறுகின்றது. தேன் கூட்டின் 3 பகுதி தேனீக்கள் மு. ப 8.57ற்கு காணப்பட்டது. தேன்கூடுதேனீக்களால் முழுமையாக நிரம்பியிருந்த நேரம்

1) மு.ப 8.58 2) மு. ப 9.00 3) மு.ப 8.59

♦ 07, 08 ஆகிய வினாக்களின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

07. 


1) 32 2) 36 3) 38


08.

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 1 | 6 |
| 4 | ...A... | 3 | 24 |
| 2 | 3 | ...B... | 30 |
| 16 | 18 | 15 | |

A, B ஆகியவற்றுக்குரிய இலக்கங்கள் முறையே

1) 3, 2 2) 2, 5 3) 5, 3

09.



இக் குறியீட்டினால் குறித்துக் காட்டக் கூடிய மிகப் பொருத்தமான சொல் எது?

1) வதனம் 2) கரகம் 3) வடிவம்

♦ பின்வரும் வாக்கியங்களில் கோடிடப்பட்டுள்ள சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய சொற்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.


10. <u>ஊன்</u> உணவு உடல் நலத்திற்கு <u>கேடு</u> விளைவிக்கும்.

1. உணவு, இன்பம் 2. இறைச்சி, தீங்கு 3. உணவு, தீங்கு

11. சுரேன் <u>தடாகத்தில்</u> உள்ள <u>கமலப்</u> பூக்களைப் பறித்தான்.

1. வாவியில், மலர்களைப் 2. பொய்கையில், தாமரைப் 3. ஆற்றில், புஸ்பம்

12.



இவ்வுருவில் ஆக்கக் கூடிய சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 13 2) 14 3) 17

13. இரு பகுதிகளிலும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

1. A 5 பட்து 25 மாது -A 5 படது 52 மாது
2. B 4 கடது 571 மன் - B 4 கடது 517 மன்
3. 33 லகட D41 படது - 33 லகட D41 படது


14. மிகச் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

1. கொதித்தாறிய நீரைப் பறுகுவோம்.
2. கொதித்தாறிய நீரைப் பருகுவோம்.
3. கொதித்தாறிய நீரப் பருகுவோம்

15. மன்னார் நகரமும் வியாங்கொட நகரமும் பருமனில் சமனானவை. வியாங்கொட நகரம் மட்டக்களப்பு நகரத்தை விடப் பெரியது. வியாங்கொட நகரம் வவுனியா நகரத்தை விடச் சிறிது.பருமனில் சிறிய நகரம் எது?

1) மன்னார் 2) வியாங்கொட 3) மட்டக்களப்பு

16.




இச் செவ்வக அட்டையில் இருந்து ஒரு பக்க நீளம் 3cm கொண்ட எத்தனை சதுரக் கட்டங்களை வெட்டி எடுக்க முடியும்?


1) 12 2) 8 3) 10

17. ஐம்பது நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கும் ஒரு கடிகாரம் உள்ளது. அது மூன்றாவது தடவை மு. ப 9.10 இற்கு ஒலித்தது எனின், முதல் தடவை ஒலித்த நேரம் யாது?

1) மு.ப 8.20 2) மு. ப 7.30 3) மு. ப 7.40

18. 'கிடைக்கும் சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது" எனும் கருத்தைத் தரும் பழமொழி யாது?

1. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.
2. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
3. எறும்பூரக் கற்குழியும்.

19. 

உருவில் காணப்படும் திண்மப் பொருளை முறிந்த கோட்டின் வழியே வெட்டும் போது கிடைக்கும் முகத்தின் வடிவம் யாது?

1. சதுரம் 2. செவ்வகம் 3. முக்கோணம்

20. அருண் காலையில் பாடசாலைக்கு நடந்து செல்லும் போது அவனது நிழல் அவனுக்கு முன்னால் விழுந்தது எனின், அவன் செல்லும் திசை யாது?

1. மேற்கு 2. கிழக்கு 3. வடக்கு

♦ R.ACD.MN ஐப் பெறுமதியாக ரூ. 843.50 எனக் காட்டலாம் எனின்,

21. ரூ. 458.45 ஐ எவ்வாறு காட்டலாம்?

1. R. DAM.NA 2. R.CMA.CM 3. R.CAM.CM

22. R.ANMD.CA இனால் காட்டப்படுவது யாது?

1. ரூ 843.80 2. ரூ. 8054.48 3. ரூ. 8053.48

♦ 23 ஆம், 24 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழுள்ள அட்டவணையைப் பயன்படுத்துக.

| தானியங்கள் | பழங்கள் | B ........... |
|---|---|---|
| குரக்கன் | வாழைப்பழம் | பாகற்காய் |
| உழுந்து | தோடம்பழம் | வெண்டிக்காய் |
| A ................ | மாம்பழம் | கத்தரிக்காய் |

23. இடைவெளி B இற்குப் பொருத்தமான சொல் எது?

1. கிழங்கு வகை 2. மரக்கறிகள் 3. கீரை வகைகள்

24. இடைவெளி A இற்குப் பொருத்தமான சொல் எது?

1. வெங்காயம் 2. பயறு 3. அன்னாசிப்பழம்


25. பிழையாக எழுதப்பட்டுள்ள கோவையைத் தெரிவு செய்க.

1) 8 X 8 - 8 = 60 - 4 2) 3 X 12+ 4 = 8X 5 3) 7 X 6+ 6 = 10 X 5

26. 

முழு உருவின் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள உருவின் பரப்பளவின் எத்தனை மடங்கு ஆகும்?

1. 8 மடங்கு 2. 4 மடங்கு 3. 2 மடங்கு

27. 


சதுரமுகியொன்று மூன்று பக்கங்களால் பார்க்கும் போது தோன்றும் விதத்தை உருக்கள் காட்டுகின்றன. அதன்படி R முகத்திற்கு எதிர்ப்பக்கத்திலுள்ள முகம் எது?

1. A 2. K 3. B


தனுசன் ஆண்பிள்ளை ஆவான். தனுசனின் அக்காவிற்கு இரண்டு ஆண் சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர்.

28. தனுசனுக்கு எத்தனை சகோதரர் உள்ளனர்?
   1. 4   2. 1   3. 3

29. தனுசனுக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?
   1. 4   2. 2   3. 3

30. சொற்கோலத்தை அவதானித்து இடைவெளியில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.
   பதவி ⟶ வித்து ⟶ துறவி ⟶ .................
   1. விறகு   2. படகு   3. திகதி

♦ தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 31 ஆம் , 32 ஆம் வினாக்களுக்கு விடை தருக.




31. அன்னாசிப் பழங்கள் 3 இனதும் மாம்பழங்கள் 5 இனதும் விலை யாது?
   1. ரூபாய் 80.00   2. ரூபாய் 100.00   3. ரூபாய் 90.00

32. அன்னாசிப்பழம் 1 இனதும் மாம்பழம் 1 இனதும் விலை யாது?
   1. ரூபாய் 22.00   2. ரூபாய் 24.00   3. ரூபாய் 20.00

♦ பின்வரும் கவிதையை வாசித்து 33 ஆம் , 34 ஆம் ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

✡
மண்ணைக் ............................ கண்டனன்.
மக்கள் தாகம் தீர்த்திடும்
தண்ணீர் வைக்கும் பானையாய் ✿
மண்ணை நொடியில் ..........................

33. ✡ என்ற குறியீடு உள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல் எது?
   1. சிற்பி   2. ஓவியன்   3. குயவன்

34. ✿ என்ற குறியீடு உள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
   1. போற்றினர்   2. தூற்றினர்   3. மாற்றினன்

35. வகுப்பிலுள்ள மாணவர்களில் ஒவ்வொரு 5 பேருக்கும் 2 பேர் பரீட்சை எழுதவில்லை என அறியப்பட்டது. அதன்படி பரீட்சை எழுதியவர்கள் 15 பேர் எனில் அவ் வகுப்பிலுள்ள மொத்த மாணவர்கள் எத்தனை பேர்?
   1) 30   2) 25   3) 45

36. மீனாவினதும் ராணியினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 48 வருடங்களாகும். ராணி மீனாவின்வயதிலும் 8 வருடங்கள் இளையவள் எனின், மீனாவின் வயது எத்தனை வருடங்களாகும்?
   1) 20 வருடங்கள்   2) 28 வருடங்கள்   3) 24 வருடங்கள்

37. 8m நீளமான கயிற்றுத் துண்டொன்று இரு சமபகுதிகளாக வெட்டப்பட்டு மீண்டும் ஒரு பகுதி இரு சம துண்டுகளாக வெட்டப்பட்டது எனின், சிறிய துண்டொன்றின் நீளம் யாது?
   1) 400 cm   2) 200 cm   3) 100 cm

38. 12 மனிதர்கள் 6 நாட்களில் செய்யும் வேலையொன்றை 4 மனிதர்கள் எத்தனை நாட்களில்செய்து முடிப்பர்?
   1) 18 நாட்களில்   2) 14 நாட்களில்   3) 20 நாட்களில்

39. வீதி ஒன்றில் 4m இடைவெளியில் நேரான பாதையில் 15 கொடிக்கம்பங்கள் நடப்பட்டுள்ளன.முதலாவது கம்பத்திற்கும் பதினைந்தாவது கம்பத்திற்கும் இடையிலான தூரம் யாது?
   1. 56m   2. 60m   3. 64m

40. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரில் உள்ள கூடுகளை நிரப்புக.
   இடமிருந்து வலம் ⟶ 1 - கமுகு தருவது
   3 - வேகமாக வீசும் காற்று
   மேலிருந்து கீழ் ⟶ 1 - ஊர்ந்து செல்லும் பிராணி
   2 - இனிமையான குரல் உடைய பறவை.


| | | |
|---|---|---|
| 1. | | 2. |
| | ■ | |
| 3. | | |

# அரசியல் கைதிகள் மேற்கொண்ட அறப்போராட்டமும் பல்கலை மாணவரது முன்னுதாரணமும்



அநுராதபுரம் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் கடந்த செப்ரெம்பா 14ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 14 வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது நாம் யாவரும் அறிந்திருந்ததே. இப்போராட்டத்தை ஆரம்பத்தில் அரசும் தமிழ் அரசியற் பிரமுகர்களும் பாராமுகமாக இருந்தமையும் மக்கள் கவனிக்கத் தவறியிருக்க மாட்டார்கள்.

அந்நேரத்தில் கைதிகளின் உடல்நிலை மிகவும் மோசமடைந்து சென்ற பொழுதும் நிபந்தனை இன்றி தம்மை விடுதலை செய்ய வேண்டும் என்ற தமது கோரிக்கைகள் அரசினால் புறக்கணிக்கப்பட்ட நிலையில், தமக்கான மருத்துவ உதவிகளையும் புறக்கணித்து போராட்டத்தை அவர்கள் தொடர்ந்திருந்தார்கள். ஏற்கனவே பலதடவை தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதமிருந்து உடல்நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தான் தற்போதும் அவர்கள் இந்தப் போராட்டதை முன்னெடுத்திருந்தனர். ஏனெனில் தமிழ்மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அவர்களின் நியாயமான உரிமைகளைப் பற்றி பேசும் நிலையில் இருக்கவில்லை.




2009 இலிருந்து 2018 வரை ஒன்பது வருடங்களுக்கு மேலாக எந்த விசாரணயுமின்றி அவர்கள் சிறைவாசத்தை அனுபவித்துள்ளனர். இந்த நிலையிலேயே, அவர்கள் தாம் விசாரணையின்றியே தண்டிக்கப்பட்டுவிட்டோம் எனவே தம்மை விடுதலை செய்யுங்கள் என்று கோரி வருகின்றனர். சந்தேக நபர்களை குற்றம் நிரூபிக்கப்படாமல் இவ்வளவு காலம் சிறையில் அடைத்து வைத்திருப்பது என்பது உலகினில் வேறெந்த நாட்டிலும் தற்காலத்தில் இடம்பெற்றிருக்கவில்லை. இது ஜனநாயக முறைமை அல்ல. சர்வதேசங்கள் உடன்படும் மனித உரிமைகளுக்கு அமைவானதல்ல. இத்தகைய சட்டத்துக்குப் புறம்பான ஒரு செயலை இலங்கை அரசாங்கத்தினால்தான் கூசாமல் அரங்கேற்ற முடியும் என்பது இதனால், மீண்டும் நிரூபணமாகி வருகிறது.

இத்தகைய மனித உரிமை மீறல்களையும் ஜனநாயக மீறல்களையும் பார்த்துக் கொண்டு கையாலாகாத்தனமாக இருக்கவும் எமது தமிழ் அரசியல் தலைவர்களால் மட்டும்தான் முடியும்.

மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் பொறுப்பாக நடக்கத்தவறிய நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவர்கள், அறப்போரில் ஈடுபட்டிருந்த அரசியல் கைதிகளுக்கு அளிக்கப்பட வேண்டிய கௌரவத்தையும் ஆதரவையும் அளிக்க முன்வந்தார்கள்.

பல்கலை மாணவர்கள் இப்போது மட்டுமல்ல பல சந்தர்ப்பங்களில் இன மானம் காக்கும் முன்னுதாரணமான செயல்முறையில் இறங்கி தமிழ் அரசியற்



தலைவர்கட்டு வழிகாட்டி யுள்ளனர்.

அந்தவகையில் திலீபனின் வழியில், திலீபனை நினைவு கூரும் காலப்பகுதியில் அரசியற் கைதிகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைதி வழி அறப் போராட்டம். பல்கலை மாணவர்களால் மேலும் கௌரவம் பெற்றுள்ளது.

ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி யாழ் பலைகலைக் கழக மாணவர்களால் யாழில் ஆரம்பிக்கப்பட்ட நடைபவனிப் போராட்டம் மிகவும் அமைதியாக நடந்து அதே மாதம் 14 ஆம் திகதி அநுராதபுரம் சிறைச் சாலையை அடைந்து, உண்ணாவிரதிகளைப் பார்வையிட்டு, ஆறுதல் படுத்தி உண்ணாவிரதிகளின் விரதத்தை முடித்து வைத்து நிறைவுபெற்றது.

இந்த நடைபவனியில் கிழக்கும் பல்கலைக் கழக மாணவர்கள், அநுராதபுரம் ரஜரட்டை பல்கலைக்கழக மாணவர்கள் என வேறு பல்கலைக்கழக மாணவர்களும் பங்குபற்றி சிறப்பித்திருந்தனர். அத்தோடு பொது அமைப்புகள் சிலவும் காணாமற்போனோரது உறவுகளும் இன்னும் பொது அமைப்புகளைச் சேர்ந்த பெண்களும்கூட நடைபவனியில் இணைந்து சிறைச்சாலை வரை உண்ணாவிரதிகளிடம் சென்றிருந்தனர்.

இந்த வகையில் ஒரு சமூகமயப்பட்ட அறப்போரை உண்ணாவிரதிகளின் கோரிக்கைக்கு ஆதரவாகவும் உண்ணாவிரதிகளை ஆறுதல் படுத்தும் முகமாகவும் மேற்கொள்வதற்கு பல்கலைக்கழக மாணவர்களால்தான் முடியும். அரசியல் தலைமைகளால் முடியாது என்பதை பல்கலை மாணவர்கள் ஆணித்தரமாக நிறுவியுள்ளனர்.

தமிழர்களின் கௌரவமான உரிமைப் போராட்டத்தை எப்பொழுதுமே பேரினவாத அரசாங்கமும் அரசியற் கட்சிகளும் மதித்ததில்லை.

1950 களிலிருந்து 1980 கள் வரையான அறப் போராட்டங்கள், குண்டா படைகளாலும், அரச அடக்குமுறை இயந்திரமான இராணுவத்தினராலும் அடக்கப்பட்டுவந்ததே மரபு.

அதே நிலை இன்றும் ஏற்படும் என்ற மிரட்டல் அடாவடி, இன்றைய மாணவர் போராட்டத்தின் முடிவிலும் காண்பிக்க எத்தனிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தின் முடிவில் சிறைச்சாலையின் முன்பு மாணவர்களும் பொது மக்களும் கூடியிருக்கையில் பேரினவாதிகளான சில வாலிபர்கள் வந்து, நடைபவனியை மேற்கொண்ட மாணவர்களுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், இருதரப்பிற்கும் இடையில் முறுகல் நிலையை தோற்றுவித்திருந்தனர். அத்தோடு நில்லாமல் ஊடகவியலாளர்களையும்கூட எச்சரித்துள்ளனர். ஆயினும் பல்கலை மாணவர்களும் மக்களும் பொறுமைகாத்து, கலகம் ஏற்படாமல் தவிர்த்துக் கொண்டு அமைதியாக ஊர் திரும்பினர்.

இவ்விடத்தில் காவல் துறையினர் கலகம் விளைவிக்க முற்பட்டவர்களைத் தடுக்காமல் இருந்ததும், கலகக்கார பேரினவாத இளைஞர்களது திடீர் பிரசன்னமும், பேரினவாத ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற, கங்கணம் கட்டியுள்ள, இனத்துவேசக் கட்சிகளின் திட்டமிட்ட ஏற்பாடாக இருக்கலாமோ என சந்தேகிக்க வைக்கிறது.

தமிழர்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கெதிராக அறப்போராட்டத்தை நிகழ்த்துவதும் எதிர்காலத்தில் பெரிய சவாலாகும் என்பதையும், தெற்கில் இனவாத அரசியல் எப்பொழுதுமே அரசோச்சிக் கொண்டிருக்கிறது என்பதையும் இச்சம்பவம் எமது எதிர்கால சந்ததியினருக்கும் எடுத்துக் காட்டுகிறது. தமிழ் மக்களின் ஒன்று திரண்ட மிகப் பெரியளவிலான வெகுசன எழுச்சிப் போராட்டத்தின் மூலமே இனவாதத்தை வெல்ல முடியும்.

–தாரகன்

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
## மாதிரிவினாத்தாள் பகுதி 1 இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 2 | 21. 2 | 31. 3 |
| 2. 1 | 12. 3 | 22. 3 | 32. 1 |
| 3. 3 | 13. 3 | 23. 2 | 33. 3 |
| 4. 2 | 14. 2 | 24. 2 | 34. 3 |
| 5. 3 | 15. 3 | 25. 3 | 35. 2 |
| 6. 3 | 16. 2 | 26. 2 | 36. 2 |
| 7. 2 | 17. 2 | 27. 2 | 37. 2 |
| 8. 2 | 18. 2 | 28. 2 | 38. 1 |
| 9. 1 | 19. 2 | 29. 3 | 39. 1 |
| 10. 2 | 20. 1 | 30. 1 | |

40.

| | | |
|---|---|---|
| 1. பா | க் | 2. கு |
| ம் | | யி |
| 3. பு | ய | ல் |

# மன்னார் வளைகுடாவின் M2 .....

கூட்டரசாங்கம், மன்னார் வளை குடா கடல் படுக்கையில் உள்ள எரிவாயுவை பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக செய்திகள் கிடைக்கின்றன.

இதற்காக -BGP pioneer - கப்பல் குறித்த இடத்தில் தரித்து நிற்பதாக ஆங்கிலப் பத்திரிகைகள் வாயிலாகவும் இணையத் தளங்கள் வாயிலாகவும் அறிய முடிகிறது. தமிழர் தாயகத்தின் வளமான இந்த எரிபொருள் வளம் சத்தமின்றி கார்ப்பரேட் நிறுவனங்களாலும் அரசாங்கத்தினாலும் அகழப்படும் நிலை உருவாகியுள்ளதை இதனூடு புரிந்துகொள்ள முடியும்.

நம் தேசத்தில் எங்கே என்ன நடக்கிறது என்பதை அறிய மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை. அறிந்தும் என்ன செய்ய முடியும் என்பது அவர்களது நம்பிக்கையீனமாக இருக்கலாம். இத்தருணத்தில் தமிழ்மக்கள் நலனுக்காக பாடுபட வேண்டியவர்கள் பாராளுமன்றத்தில் தமிழ்மக்கள் பிரதிநிதிகளாக உள்ளவர்கள்தான்.

அவ்வாறு தமிழர் தாயகத்தில் இருந்து அபகரிக்கப்படவிருக்கும் வளங்களின் சொத்துமதிப்பு நிச்சயமாக கொஞ்ச நஞ்சமல்ல.

களஆய்வறிக்கையின் படி பின்வரும் தகவல்கள் ஆங்கில ஊடகங்களின் வாயிலாக நமக்குக் கிடைக்க முடிகிறது. அதுமட்டுமல்ல முன்னைய அரசாங்கம் மேற்படி இயங்கை எரிவாயு திட்டம் சம்பந்தமாக பிரான்சின் நிறுவனமான 'குளோபல் ஜயன்ற்' என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ள இருந்த விடயமும் -அன்றைய பெற்றோலியவளம் தொடர்பான அமைச்சர் ஒருவரால் தகவல் வெளிடப்பட்டிருந்தது. இதனை 'மிறர் சிற்றிசன்' ஊடகத்தில் காணலாம்.


மேற்படி தமிழர் தாயகமான வளைகுடாவில் காணப்படும் எண்ணெய்க் கிணறுகளின் பெயர்கள்

1. பேள்
2. டோறாடோ
3. பாராகுடா

வளங்களின் அளவு வருமாறு:

மன்னார் பேசினில் மட்டும்,

- ♦10 பில்லியன் பரல் எண்ணெய்
- ♦இரண்டு வகை எரிவாயு- திரவமாக்கப்பட்டால் அதன் அளவு 2 திரில்லியன் கன அடிகள்.




இந்த எரிபொருட்களின் அளவுகள் இலங்கையின் எரிபொருள் தேவையை 60 வருடங்களுக்குப் பூர்த்தி செய்யப் போதுமானவை என்று தற்போதைய அரசாங்கத்தின் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு தெரிவிக்கிறது.

இதன்பால் அவர்கள் மூன்றாவது ரெண்டரை அழைப்பதற்கு இவ்வருடத்தின் ஆரம்பத்தில் ஆயத்தமாகியிருந்தார்கள். இதனடிப்படையில் மன்னாரிலும் காவேரியிலுமாக 14 கடல் தொகுதிகளை (sea plant) அமைக்க எதிர்பார்க்கிறது அரசாங்கம்.

அதேநேரம் M2 வலயத்தில் இத்திட்டத்தை நிறைவேற்ற 240 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என கணிப்பிடுகிறது. மேலும் எதிர்வரும் 2021 ஆம் ஆண்டளவில் இத்திட்டங்கள், பூர்த்தியடைந்து எரிபொருளை விநியோகம் செய்யமுடியும் என்றும் அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் எமது வளம் பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும் மன்னார் குடாவில் என்ன நடக்கிறது என்பது பற்றியும் இதுவரை தமிழ் ஊடகங்களில் பேசப்பட்டது குறைவாகவே உள்ளது. பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் மக்கள் பிரதிநிதிகளின் செல்வாக்கிற்கு உடபட்டிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

மக்கள் எதை அறிந்திருக்க வேண்டும் எதை அவர்கள் அறிந்துவிடக்கூடாது என்பதில் மக்கள் பிரதிநிதிகள் மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் இருப்பது போல் தெரிகிறது. –தொகுப்பு: சுடர்

*Journal of Geological Society of Sri Lanka Vol. 17 (2015), 139-158*
*J.W. Herath Felicitation Volume*

**மொத்த சேதனங்களின் நூற்றுவீதமும் அவை அமைந்த பாறையின் யுகங்களும் இந்த வரைபின் மூலம் அறியமுடியும்**






*Fig. 5 Total organic carbon (TOC) of sediments from (A) Pearl-1, (B) Dorado and (C) Barracuda wells. Data for the Pearl-1 well is from unpublished reports held at PRDS*




கி.காறிலவன் -தரம் 6




பி . மதுமிதா -தரம் 2
நெகிழி களியால் ஆக்கப்பட்டது



பி . பிறேமிதா -தரம் 6




கி .நிலாவிழி -தரம் 5




ஜ. துவாரகா -தரம் 11



க. சாருகான் -தரம் 7



இயற்கை- புகைப்படம்
(ஜம்புப்பழம்)



அ.அஸ்மிதா -முன்பள்ளி



ஜ. துவாரகா -தரம் 11

**விலை ரூபாய் 70.00**

"பொய்யாமொழி" இதழ் தொடர்பான அனைத்து தொடர்புகளுக்கும் கைபேசி தொடர்பு எண்: 0771461509
Viber (வைபெர்) . WhatsApp (வாட்ஸ் அப் ) இலும் தொடர்பு கொள்ளலாம்.
மின்மடல் முகவரி: poiyaamozhi2018@gmail,com

இந்த இதழ் யாழ். பொய்யாமொழிக் குழுமத்தால் வெளியிடப்படுகிறது. பதிப்புரிமை பொய்யாமொழிக் குழுமத்திற்கு மட்டுமே.